

# முத்திதழ்

நீ. நான்.. நாம்...

முத்திதழ் – 04

ஏப்ரல் 15 2021

முதுசத் தொகுப்பு



## இரட்டைச் சதம் பெற்ற உனைஸ் நுபைல்




## கேள்விக்குறியாகும்? கடினப் பந்து விளையாட்டு மைதானம்



## நோன்பும் நன்னிலை மேம்பாடும்

ரூ. 70/=

மாதாந்த சிற்றிதழ்

மாதாந்த இதழ்

# முத்திதழ்

முத்துப்படைப்புகளின் தொகுப்பு

Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk

SCAN ME

## எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்

www.muththizhal.com | +94 740818782 | Mutur | Muththizhal


## அட்டைப் பட விளக்கம்

### கெவ்லியா வெளிச்ச வீடு - Sampur Foul Point Lighthouse

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் [மூதூர்] கொட்டியாரக்குடா கடலை பிரதிபலிக்கும் வகையில் ஆங்கிலேயர் காலத்தில் 1863 இல் நிர்மாணிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க ஒரு நிர்மானமாகும். கடந்த மூன்று தசாப்த உள்நாட்டு போரில் பாராமுகமற்று சேதமுற்ற நிலையில் காணப்பட்ட இந்நிர்மானம் இலங்கை அரசின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புராதன சொத்துக்களில் இவ் வெளிச்ச வீடும் உள்வாங்கப்பட்டு அண்மையில் அரசினால் கொண்டுவரப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மீள் திருத்தம் செய்யப்பட புதிய காட்சி அமைப்பே இப்புகைப்படம்.

Capture By Raseem


## ஒன்லைன் மூதூர் வாசிகசாலை

Pdf வடிவிலான e-BooK, சஞ்சிகை, Gazette, பாடசாலை புத்தகங்கள், Exam Papers, சிறுகதை புத்தகங்கள், சிறுவர் நூல்கள், நாவல்கள், ஆய்வுகளுக்கான உசாத்துணை நூல்கள், கட்டுரைகள், இணைப்புகள் மற்றும் நாளாந்த இலங்கை பத்திரிகை என்று பல்வேறு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள **Online Mutur Library** என்ற **WhatsApp Group** ஐ நாடுங்கள்.

Online Mutur Library

நீங்களும் இணைய விரும்பினால் 0717891887, 0771663140 என்ற இலக்கத்திற்கு Online Mutur library என்று WhatsApp Message அனுப்புங்கள்.






இதழ்-04 ஏப்ரல் 15 2021



Pages - 26
Size - A4
Location - Mutur
Category - Magazine
Layout By - Sanoos.tm
Adz Partner - Online Mutur Library

Conatct - +94 740818782
Gmail - muththizhal.lk@gmail.com
Social Media - Muththizhal
Address - Periya Palam, Mutur.

பிரதம ஆசிரியர்
JUNAID MOHAMED IHSHAN

துணை ஆசிரியர்
Abdul Cader Mohamed Asmy

**Rs : 70/=**

நோன்பும் நன்னிலை மேம்பாடும் — பக் 06

மூதூர் கல்வியின் நிலையும்... — பக் 18

இரட்டைச் சதம் – வரலாற்று சாதனை — பக் 04

விளையாட்டுச் செய்திகள் — பக் 10

64ஆம் கட்டை காணி — பக் 19

மூதூர் வரலாறு – முதல் பா.உறு.. — பக் 20

பெண்களின் ஆரோக்கியம் — பக். 07

போதைப் பொருள் பாவனையும் இளைஞர்.... — பக். 13

திருநங்கை — பக். 12

கடினப் பந்து மைதானம் — பக். 14

வைரவிழா நோக்கி அல்ஹிலால் மத்திய கல்லூரி



## ஆசிரியர் மடல்

புத்தாண்டையும் புனித மாதத்தையும் கொண்டாடும் எமது உறவுகளுக்கு முத்திதழ் வாழ்த்து உரித்தா கட்டும். இவ்வாண்டு தமிழ் சிங்கள புத்தாண்டை கொண்டாடும் மூதூர் தமிழ், சிங்கள மக்களோடு அதே காலப்பகுதியில் புனித ரமழான் மாத நோன்பை வெகு விமரிசையாக கழிக்கும் இஸ்லாமிய உறவுகளுக்கும் எமது சிற்றிதழ் சார்பிலான நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம். நாட்டின் சுபீட்சத்திற்கும் இன ஐக்கியத்திற்கும் பங்காற்றும் வகையில் எமது கொண்டாட்டங்கள் அமையப்பெறவேண்டும்.

கோடைகால வெயில் காரணமாக மூதூர் பிராந் தியத்தில் பாரிய தொரு நீர்த்தட்டுப்பாடு நிலவுவதாக அறியக்கிடைக்கின்றது. எனவே பொதுமக்கள் நீர் பாவனையை சிக்கனமாக பயன்படுத்த வேண்டப் படுவதோடு நீரின் தேவையை உணர்ந்து வீண் விரயங் களை முடியுமான அளவிற்கு தடுக்க மூதூர் நீர் சுத்திகரிப்பு நிலையம் கேட்டுக்கொள்கின்றது.

ரமழான் விடுமுறை தினங்களில் முடியுமான அளவிற்கு இறை நம்பிக்கையோடு தங்களின் வணக்க வழிபாடுகளை கோரோனா தொற்று நோய்ப்பாதுகாப்போடு ஈடுபடுத்திக்கொள்ள மூதூர் பள்ளிவாசல் சம்மேளனம் மற்றும் மஜ்லிஸ் ஷூரா சபை நினை வூட்டிக் கொள்கின்றன. அத்தோடு இரவுநேர வீண் விளையாட் டுக்கள், கேளிக்கைகள் போன்றவற்றை முடியுமான அளவிற்கு குறைத்துக்கொள்ள இளைஞர்களுக்கு வேண்டப்படுகின்றது. மேலும் கடற்கரை, பொழுதுபோக்கு பூங்கா போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களை சுத்தமாக வைத்திருக்கவும் பொது மக்களை மூதூர் பிரதேச சபை தவிசாளர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

## மாதமொரு வேலைத்திட்டம்

### மருத்துவ பாவனைக்காக Wheel Chair அன்பளிப்பு



அவசர சிகிச்சை பிரிவு மற்றும் பெண்கள் , சிறுவர்கள் பகுதி களில் பாவனைக்கு உகந்ததல் லாத நிலையில் காணப்பட்ட சக்கர நாட்காலிகள் காரணமாக மருத்துவ ரீதியிலான பல இடர் பாடுகளை மூதூர் தளவைத்திய சாலை நிர்வாக எதிர்நோக்கியது.

இந்நிலையில் எமது தள வைத்தி யசாலையில் நிலவிய சக்கர நாட்காலி பற்றாக்குறையை முன்னிட்டு எமக்கு கிடைக்கப்பெற்ற வேண்டுகோளுக்கு அமைவாக ஜே.ஜே. பிவுண்டேஷன் நிறுவன உதவியோடு துரித நடவடிக்கைகளுக்காக சக்கரநாட்காலிகள் இரண்டு மூதூர் தள வைத்தியசாலை மருத்துவ பொறுப்பதிகாரி Dr Kayalvili (MS) அவர்களிடம் முத்திதழ் குழும அங்கத்தவர்கள் மூலம் கடந்த மார்ச் புதன்கிழமை (31) கையளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## தொழில் வாய்ப்பு பயிற்சிப் பட்டறை



முத்திதழ் குழுமத்தின் அனுசரணையுடன் **EP Academy** கல்வி நிறுவனம் கடந்த 2021.03.20 அன்று, மூதூர் Pearl Grand மண்டபத்தில் தொழிற்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் உருவாக்கும் நோக்கில் இலவச பயிற்சிநெறி ஒழுங்குபடுத்தப்பட்டது. மேற்படி நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் பலர் கலந்துகொண்டு தங்களுக்கான மேற்படிப்பு தொழிற்கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

# முத்திதழ் வாழ்த்து

## இரட்டைச் சதம் பெற்று கிழக்கு மாகாணத்தில் வரலாற்று சாதனை நிகழ்த்தினார் மூதூர் மத்திய கல்லூரி மாணவன்.




| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | பாஹிம் முகம்மது நுபைல் |
| பிறந்த திகதி | : | 2002.05.03 |
| கற்ற பாடசாலை | : | தி/மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) |
| தரம் | : | 13 (கலைப் பிரிவு) |
| விலாசம் | : | அரபிக் கல்லூரி வீதி, பெரியபாலம் |
| தந்தை | : | முஹம்மது பாஹிம் (ஆசிரியர்) |
| தாய் | : | பௌசுல் றஸ்மியா (ஆசிரியை) |

இலங்கை பாடசாலை கிரிக்கட் சம்மேளனத்தினால் தேசிய ரீதியாக நடாத் தப்பட்டு வரும் 19 வயதுக்குற்பட்ட தேசிய பாடசாலை மட்ட கிரிகட் தொடரில் இன்று (01) மூதூர் MCC மைதானத்தில் இடம்பெறும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி (தே/பா) யுடனான போட்டியில் மூதூர் மத்திய கல்லூரி (தே/பா) அணியின் வீரர் உனைஸ் நுபைல் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி அபாரமாகத் துடுப்பெடுத்தாடி (128) பந்துகளில் (220) இரட்டைச் சதம் பெற்று கிழக்கு மாகாண ரீதியில் சாதனை படைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட புகழ் பெற்ற பாடசாலை அணிகள் பங்குபெறும் இத் தொடரில் பெறப்பட்டிருக்கும் அதிகூடிய ஓட்டமாக இது பதிவாகியுள்ளது.

தேசிய ரீதியாக நடைபெறும் இத்தொடரில் மூதூர் சார்பாக சொந்த மண்ணில் இவ் இமாலய வரலாற்று சாதனையை நிகழ்த்தி மூதூர் மண்ணுக்கு பெருமை தேடிக் கொடுத்த மூதூர் மத்திய கல்லூரி அணியின் வீரர் உனைஸ் நுபைல் அவர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முழுப்பெயர் - சம்முன் கஸ்ஸாலி
பிறந்த திகதி - 30-08-1962
தொழில் - ஓய்வுநிலை அதிபர்
ஊடகம் - தினகரன் பத்திரகை நிருபர்
ஊடகக்காலம் - 08-12-1994
தாய் - கச்சி முகம்மது உம்முசல்மா
தந்தை - செய்யது முகமது சம்முன்
வதிவிடம் - மத்திய வீதி மூதூர் - 04

# நேர்காணல்


**நேர்கண்டவர் :**
**இஹ்ஸான் ஜே.எம்.ஐ**




**ஊடகவியலாளராக உங்களைப் பற்றி சற்று கூறுங்கள்?**

அறிமுகம் சாதாரணமாக சிறுவயதில் பாட சாலையில் கல்வி பயிலும் காலத்தில் இருந்து பத்திரிகை வாசிப்பின் மீதான ஆர்வம். அதற்கு பிரதான காரணமாக எனது தந்தை யின் தினசரி பத்திரிகை வாங்கி வாசிப்பவராக இருந்தார். அவர் வாசிக்கும் பத்திரிகைகளை நானும் எனது ஒய்வுகாலத்தின் போது வாசிப்பேன். இதன் காரணமாக ஊடகத் துறையில் நுழைவதற்கு சுயமாக விருப்பு ஏற்பட்டது என்று சொல்லலாம்.

பத்திரிகைகளை ஆர்வமாகக் கொண்டு வாசிப் பதனால் உண்மையை மக்கள் மத்தி யில் கொண்டு செல்லக்கூடிய சக்தி ஊடகம் கொண் டிருப்பதை உணர்ந்து சிறிய, சிறிய செய்திகள் புகைப்படங்கள் கட்டுரைகள் என்பவற்றை அப்போது பணியாற்றிய மூதூர் தினகரன் செய்தி நிருபராக இருந்து தற்போது ஓய்வு பெற்ற அதிபரான ஏ.எஸ். உபைதுல்லா அவர் களிடம் கொடுத்து பிரசுரங்கள் செய்தேன். அத்தோடு லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவன பிரதம ஆசிரியர் அமரர் ஆர்.சிவகுருநாதன் மற்றும் தினகரன் முகாமைத்துவ ஆசிரியரும், தற்போதைய நவமணி பிரதம ஆசிரியருமான என்.எம். அமீன் அவர்கள் மூலமாகவும் கிராம மட்ட மக்கள் குறைபாடுகள், நிகழ்வுகள், புகைப் படங்களை அனுப்பி பத்திரிகையில் பிரசுரிக்க ஆரம்பித்தேன். இதிலிருந்து எனது பத்திரிகைக் கான ஊடக பயணம் ஆரம்பமா கியது. இதன் பிற்பாடு சகோதரர் எம்.எம்.ஏ. அனஸின் (துறைமுக அதிகார சபை) அவர்களின் ஆலோசனைக்கு அமைய 1994.12.08 ஆம் திகதி நிறுவனத்தினால் மூதூருக்கான தினகரன் பத்திரிகை நிருபராக இணைந்து கொண்டேன்.

**ஊடகவியலாளராக நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்னென்ன?**

உண்மையிலேயே முக்கியமானதொரு வினாவை வினவியுள்ளீர்கள். அதற்கு முதற்கண் உங்க ளுக்கு எனது தனிப்பட்ட நன்றிகள்.

சாதாரணமாக எத்தனையோ அரச பதவிகளில், அரசியலில், மற்றும் பொது நிறுவனங்களில் இருந்து பணியாற்றுவதும் ஒரு சேவைதான். இப்படியான பொதுப் பணிகளிலும் குறைந் தது முப்பது வருடமாக பல்வேறு பொறுப்பு களில் இருந்து பணி செய்ததையும் என்னோடு சமூகப் பணியில் பயணித்தவர்களுக்குத் தெரியும்.

ஆரம்ப நாட்களில் தாளில் செய்திகளை எழுதி தபாலில் அனுப்புதல், தொலை நகல் மூலமாக அனுப்புதல் இருந்தாலும் தற்போது மின் னஞ்சல் மூலமாகவும் செய்திகளை அனுப்புதல் போன்றவற்றுக்கான நவீன வசதிகள் என்னிடம் இல்லாதது சிறிய சவாலாக கருதியபோதும், கடந்த உள்நாட்டு யுத்த காலத்தில் செய்திகளை அனுப்புவதிலும் அதனைப் பிரசுரம் செய்யும்போது எதிர்கொண்ட பல்வேறு சவால்களும் மறக்கமுடியாத எதிர்கொண்ட சவால்கள் என என்னால் என்றும் நினைவு கூறப்படுகின்றன.

இவற்றுக்கு மேலாக செய்தியாளனாக உண்மையை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டிய தார்மீக கடமைப்பாடும் எனக் குண்டு. அந்தவகையில் சமூகத்தில் நிகழும் அநியாயம் மற்றும் சில சம்பவங் களான பாராளுமன்றத்திற்கு அமைச்சர் ஒருவரை சந்தித்துவிட்டு அதில் கலந்துகொண்டவர்கள் பெயர் வரவில்லை என்ற செய்தியால் தாக்கப்பட்ட சம்பவம், ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆசிரியர் பகடிவதை செய்யப்பட்டது தொடர் பாக வந்த செய்திகள், வைத்தியசா லையில் பிரசவத்தாயின் குழந்தை மலக்குழியில் பிறந்ததாக பிரசுரமான செய்திகள் என்பன மிகப்பெரும் சமூகவியல் சார் சவால்களாக கருதக்கூடியான. இருந்த போதும் எனது 26 ஆண்டுகால பயணம் மனத் திருப்தியோடு பயணிப்பதை எண்ணி மனத்திருப்தி கொள்கின்றேன் ஒரு ஊடக வியலாளனாக.

**எமது சமூகத்தில் ஊடகத்துறைசார் பங்கேற்பு எந்த அளவிற்கு உள்ளது?**

எமது சமூகத்தைப் பொறுத்தமட்டில் ஊடக வியலாளர்கள் என்று தன்னை சமூக வலைத் தளங்கள் வாயிலாக மட்டுமே தங்களை நாமம் சூட்டிக் கொள்கிறார்கள். இது உண்மை யில் குறுகிய ஊடகத்துறையின் பண்பாகவே என்னால் கருத முடிகின்றது ஏனெனில் தேசிய ரீதியான பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் எனது ஊரை சேர்ந்தவர்கள் மிகக் குறைவாகவே தற்போது செயற்படு கின்றனர். இந்நிலைப்பாடு சமூகத்தில் காணப்படுகின்ற ஊடகத் துறையின் மீதான பின்னடைவை காண்பிப்பதாகும். சமூக வலைத்தளங்களில் ஆக்கங்களை செய்தி ரீதியாக பிரசுரிக்கும் சுயாதீன ஊடகவியலா ளர்கள் தேசிய ரீதியான அங்கீகாரம் பெற்ற இலத்திரனியல், அச்சு ஊடக நிறுவனங்களில் பணியாற்ற முன்வரவேண்டும். ஆர்வ முள்ளவர்கள் முன்வரும் பட்சத்தில் அதற் கான வாய்ப்பு, வளங்களை என்னால் கண்டிப் பாக ஏற்படுத்தித்தர முடியும். இதனூடாக சமூகம்சார் ஆவணமாக்களை எம்மால் வழங்க முடியும்.

**ஊடகவியலாளர்கள் மற்றும் நீங்கள் ஆற்றிய பணிகளை கூறுங்கள்?**

எனது குறுகிய கால எல்லையில் ஊடகவி யலாளர் என்ற நாமத்துடன் என்னால் முடிய மான பல செய்திகளை தேசிய ரீதியில் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளேன். இதனூ டாக எமது ஊரில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்று என்னால் அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக மூதூர் திருகோண மலைக்கான அப்போதைய கடல் வழிப் போக்குவரத்தில் மக்கள் எதிர்கொண்ட சவால்கள், அனர்த்த சூழலில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களின் இன்னல்கள், கொட்டியாரக் கடலின் கரையோரம் மீனவர்கள் எதிர் நோக்கிய பிரச்சினை , கல்வேலி அமைப்பு, வேதத்தீவு ஆற்றுக்கான மிதப்பு பாதை, மூதூர் தள வைத்தியசாலைக்கான பௌதிக வளங்களை பெறுவது, மக்களின் குடிநீர், போக்குவரத்து, மின்சாரம், காட்டு யானைகள் அழிவுகள், விவசாயம், மீன்பிடி தொடர்பான பிரச்சினை இன்னும் பல விடயங்களையும் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு ஊடக வாயிலாகக் கொண்டு சென்றுள்ளேன் எனது ஊடகப் பயணமூடாக.

**ஊடகத்துறை சார்ந்து சமூகத்திற்கு முன்வைக்கும் வேண்டுகோள் என்ன?**

எமது சமூகத்தில் ஊடகவியலாளர, எழுத் தாளர், கவிஞர்கள் போன்றோர்களின் தரம், தகுதி, அவர்களுக்கான கண்ணியம் எவ்வாறு அளிக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு சமூகமயமாக்கப் படவில்லை. இதன் காரண மாக எமது ஊரில் தேசிய ரீதியான ஊடகத் துறை சார் நிபுணர்கள் பற்றாக் குறையாகவே இருக்கின்றது.

குறிப்பாக இலக்கியத் துறை சார்ந்த இலக்கிய வாதிகள் ஊடகத் துறையில் நுழைவதை அவமானமாக கருதுவதாக எண்ணத் தோன்றுகின்றது. சமூக வலைத் தளங்களில் அதிக தாக்கம் செலுத்தும் இளம் எழுத்தா ளர்கள், சுயாதீன ஊடகவியலாளர்கள், மாணவர்கள் எமது ஊரில் பலர் இயங்குகின் றனர். இவ்வாறான ஆர்வமுள்ள புதிய தலை முறையினரை முன் னோடிகளாக ஊடகத் துறையில் பயணிக்க நாம் வழிகாட்டி அடுத்த தலைமுறைக்கான வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

**அத்தோடு தற்காலத்தில் உள்ள நவீன தொலைத் தொடர்பாடல் வசதிகளினூடாக பெண்கள், அரச ஊழியர்கள் மற்றும் சுய தொழில் செய்யும் நபர்கள் கூட பல்வேறு தேசிய பத்திரிகையின் செய்தியாளராக பணி யாற்றுவதற்கு வாய்ப்புத் திறந்துள்ளன. இதன் அடிப்படையில் எமது ஊரைச் சார்ந்த பலர் தனித்துவமான ஊடகவியலாளர்களாக எதிர் காலத்தில் பணியாற்ற முன்வர வேண்டும் என்பது எனது தனிப்பட்ட அவாவாகும்.**

# நோன்பும், நன்னிலை (Well –Being) மேம்பாடும்



நஸீர் ஹாரிஸ்

– சில அறிமுகக் குறிப்புக்கள்

*"The philosophy of fasting calls upon us to know ourselves, to master ourselves, and to discipline ourselves the better to free ourselves. To fast is to identify our dependencies, and free ourselves from them."- Tariq Ramadan*

*" நோன்பின் தத்துவமானது நம்மை நாம் அறிந்து நம்மை முகாமை செய்து கொள்ளவும், நம்மை விடுவிக்க வேண்டியவற்றிலிருந்து விடுவித்துக் கொண்டு நம்மை ஒழுங்குபடுத்தவும் அழைப்பு விடுக்கின்றது. நோன்பு என்பது நமது சார்பு நிலைகளை அடையாளப்படுத்திக் கொண்டு, அவற்றிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதாகும்" - தாரிக் ரமலான் -*

நோன்பின் பிரதான இலக்கு **"இறைபய (அத்-தக்வா) உணர்வினை வளர்த்தெடுத்தல்"** என்றபோதிலும் , அது மானுட வாழ்வில் ஏற்படுத்துகின்ற மாற்றங்கள் கனதியானவை. அவ்வகையில் உடல், உள, சமூக மற்றும் ஆன்மீகப் பெறுமானங்களின் (Collecting well Being) வளர்ச்சியில் ரமலான் எவ்வகையான தாக்கங்களை ஏற்படுத்திச் செல்கின்றது என்பதனைப் பற்றிய அறிவியல்சார் கருத்துக்களைத் தொட்டுச் செல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இத்தகைய அறிவியல்சார் கருத்துக்களை வாசிப்புச் செய்வதன் மூலம் படைப்பாளன் நமக்கு வழங்கியுள்ள அருட்பேருகளைப் புரிந்து கொள்ள முடிவதுடன், வருடாவருடம் எம்மைப் புடம்போட வருகின்ற ரமலானை ஆவலுடன் வரவேற்பதற்கான வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

நோன்பு பற்றியதான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் (Scientific Research) பல்வேறுபட்ட தளங்களிலும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ள சூழலில் நோன்பு நம்மில் ஏற்படுத்தும் ஒருசில மாற்றங்களையே இக்கட்டுரை தொட்டுச் செல்கின்றது.

"ஸஹரிலே பரக்கத் (அருட் பேருகள்) உண்டு" என நபிகளார் குறிப்பிடுகின்ற செய்தி நமக்கு பல்வேறு உண்மைகளைச் சொல்கின்றது. ஸஹரி லிருந்து இப்தார் வரைக்குமான கால இடைவெளியினை உணவுத் தவிர்ப்பாக மாத்திரம் நோக்கக்கூடாது. அத்தகைய தவிர்ப்பு நமது உடலில் தேங்கியுள்ள நச்சுக்களையும், தேவையற்ற கொழுப்புக்களையும் அகற்றிட துணை புரிகின்றது.

நோன்பு நோற்பதன் மூலம் உடலுக்குத் தேவையான குளுக்கோசினை நமது உடல் இயற்கையாகவே உற்பத்தி செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்கின்றது. அத்துடன் நீண்டகாலம் எமது உடலில் சேமிக்கப்பட்டிருக்கின்ற கொழுப்பினை சக்தியாக (Energy Power) மாற்றி உடலை இயக்கமிக்கதாக வைத்துக் கொள்வதில் கல்லீரலும் பாரிய பங்களிப்பினைச் செய்கின்றது. இதனால் இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தத்தின் அளவு குறைவடைகின்றது. நமது உடலில் சேமிக்கப்பட்டுள்ள கொழுப்பினை முதன்மைச் சக்தியாக மாற்றுவதன் மூலம் உடல் எடை இழப்பு ஏற்பட்டு சக்கரையின் அளவு சமநிலைப்படுத்தப் படுகின்றது.

முறையான மற்றும் நியமமான உணவுப் பழக்கத்தினை (Eating Habits) கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினையும், முறையற்ற உணவுப் பழக்கவழக்கத்தினால் ஏற்படுகின்ற உடல் உபாதைகள் மற்றும் அஜீரனக் கோளாறு என்பவற்றை தணித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினையும் நோன்பு வழங்குகின்றது.

> **"ஸஹறிலே பரக்கத் (அருட் பேருகள்) உண்டு"**
> என நபிகளார் குறிப்பிடுகின்ற செய்தி நமக்கு பல்வேறு உண்மைகளைச் சொல்கின்றது. ஸஹறி லிருந்து இப்தார் வரைக்குமான கால இடைவெளியினை உணவுத் தவிர்ப்பாக மாத்திரம் நோக்கக்கூடாது. அத்தகைய தவிர்ப்பு நமது உடலில் தேங்கியுள்ள நச்சுக்களையும், தேவையற்ற கொழுப்புக்களையும் அகற்றிட துணை புரிகின்றது.

அவ்வாறே, ஒரு நோன்பாளி தன்னகத்தே காணப்படுகின்ற எதிர்மறைக் குணவியல்புகளான கோபம், விரக்தி, பொய்மை, ஏமாற்று, விரோதம் போன்ற இழிகுணங்களை தணித்துக் கொள்வதற்கான பயிற்சியினை தொடர்ந்தேர்ச்சியாக பின்பற்றுவதனால் அதிக மனச்சோர்வு , மனஅழுத்தம், ஞாபக மறதி மற்றும் மனப்பிறழ்வு போன்ற உளவியல் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு வாழ்வை வெற்றிகொள்வ தற்கான தீர்வாக நோன்பு காணப்படு வதனை உளவியலாளர்கள் உறுதிப் படுத்துகின்றனர்.

இத்தகைய உடல், உள ரீதியான மாற்றங்களை தன்னில் வளர்த்துக் கொண்ட ஒரு நோன்பாளி தான் அங்கம் வகிக்கின்ற சமூகத்தில் தனக்குள்ள வகிபாகங்கள் யாவை என்பதை நன்கறிந்து செயற்படுவதற்கான தயார் நிலையில் எப்போதும் இருப்பார். பிறர் தேவை அறிந்து உதவுதல், அடுத்தோரை மதித்து நடத்தல், கூட்டுச் செயற்பாடுகளில் கலந்து கொள்ளல், சமூக விரோதச் செயல்களை இல்லாதொழிப்பதற்கு முன்னிற்றல் போன்ற சமூகம்சார் விவகாரங்களில் மனநிறைவுடன் பங்கேற்புச் செய்வதற்கான வாய்ப்பினையும் நோன்பு நமக்கு வழங்குகின்றது.

எனவே, இத்தகைய உடல், உள மற்றும் சமூக ரீதியான மாற்றங்களை நம்மிடையே வளர்த்துக் கொண்டு எதிர்வரும் ரமலானில் ஆற்றவேண்டிய நமது பணிகளை அடையாளம் கண்டு நம் ஆன்மீகத்தை விருத்தி செய்வதன் மூலம் ரமலானின் ஊடாக நமது நன்னிலையை அதிகரித்து , "ரய்யான்" எனும் சுவன வாயிலின் மூலம் சுவனம் நுழைந்திட முடியும்.

ரமலானியப் பயிற்சிப் பாசறை நமக்குக் கற்றுத்தரப் போகின்ற எல்லாவிதமான பாடங்களையும் கற்றுத் தேர்ந்து சுவனம் நுழைவதற்கான வாய்ப்பினை வல்லவன் நமக்கருளட்டுமாக.

# பெண்களும் ஆரோக்கியமும்




**Dr. Mrs. Rizana Jasry (BUMS)**
Dip in counselling, Dip in Accupenture
Periyapalam, Mutur.


இன்றைய காலச்சக்கரத்தில் துரிதமாக இயங்கும் உலக செயற்பாடுகளில் மனிதன் இறந்த பின் இன்னலுரும் விடயமாகவே ஆரோக்கியம் என்பது நோக்கப்படுகின்றது. அதிலும் பெண்கள் ஆண்களை விட இயற்கையிலேயே உடல், உள பரிமாணங்களில் வேறுபட்டு காணப்படும். இயற்கை தன்மை கூட சிலவேலை ஆரோக்கிய வேற்றுமைகளை உருவாக்குகின்றது. ஒருன் தான் உடல், உள ரீதியாக எந்த வித பாதிப்புமின்றி இருப்பதுடன் மற்றவர்களுக்கும் தன்னால் எந்த தொந்தரவும் இல்லாமல் இருப்பதுவே ஆரோக்கியமாகும்.

பெண்கள் இயற்கையாகவே பௌதிக உடலமைப்பில் ஆண்களை விட வேறுபட்ட உடல் வளர்ச்சியில் சிறு வயதை தாண்டி ஒரு பெண் கட்டிளமைப் பருவத்தை அடைவதும் அதனை தொடர்ந்து அவனின் உடலில் ஏற்படும் மாற்றங்களும் இயற்கையின் வரங்கள் ஒரு பெண் தான் பூப்பெய்தலுடன் தொடங்கும் மாதவிடாய் சக்கரம் அவள் தாய்மை அடையும் பாக்கியம் உடையவள் என்பதை உணர்த்தும் உன்னத மாற்றம். இப்பருவ மாற்றத்தை பெண்கள் ஏற்று நடப்பதுடன் தமது உடல், உள ஆரோக்கியம் பேசுவதிலும் மிக முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

இக்காலத்தில் ஏற்படும் உதிரப்போக்கின் போது துவாய்கள் , துணி, என்பவற்றை பாவிப்போர் அதனை நான்கு மணி நேர இடைவெளியில் கட்டாயம் மாற்றிக்கொள்ளவேண்டும் மேலும் இதன்போதான உடல், உள அசௌகரியங்களையும் உணர்ந்து செயற்பட வேண்டும். வயிற்று வலி, மூட்டுக்களில் நோவு, குமட்டல், வாந்தி தலையிடி, அதிக வியர்வை, மார்பகங்களில் நோவு என பல மாற்றங்கள் இருக்கும் இதன்போது சுடுநீர் ஒத்தலமிடல், அதிகளவான ஓய்வும், நீரகங்கள் அதிகம் எடுத்தல், மாமிச உணவுகளை குறைத்துக் கொள்ள, பருத்தி மெல்லிய ஆடைகளை அணிதல் குமட்டல் என்பவற்றின் போதும் சுடு நீருடன் தேசிப் புளி போன்ற  வீட்டு மருத்துவங்கள் செய்யலாம்.

இதுதவிர இக்காலத்தில் உளரீதியாக பதற்றம் , மறதி , அதிக நித்திரை என பல மாற்றங்கள் உருவாகும். இதற்கு தகுந்தாற்போல் பயிற்சிகள், யோகா, தியானம் , போதியளவு நித்திரை, மன அமைதி தரும் பொழுதுபோக்குகள் என சில உள்நிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கட்டிளமை வயதில் ஏற்படும் உடலியல் மாற்றங்களை உணர்ந்து செயற்படுதல் மிக முக்கியமானது. பிறப்புறுப்புகளில் சுத்தம்பேணல் இதில் பல தாய்மார்கள் தம் பெண் குழந்தைகளுக்கு சொல்ல கூச்சப்படும் விடயமாக கருதுகின்றனர். முடிகளை அகற்றி சிறந்த முறையில் சுத்தமாக பேணுதல் வேண்டும் இது தவிர இனப்பெருக்கம் தொகுதியின் வெளிப்படை உறுப்புக்கள் மிகவும் மெல்லிய கலங்களால் ஆக்கப்பட்டு இருப்பதாலும் இதில் தொற்றுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதால் கடுமை யான தன்மையுடைய சவர்க்காரம் டிட்டோ போன்ற செறிவு கூடிய பதார்த்தங்களால் கழுவு வதை தவிர்த்தல் வேண்டும்.




மேலும் மல வாய்களை சரிதம் செய்த கைகளால் நீல தொட்டு சுத்தம் செய்தல் கூடாது பெண்ணில் Urethra எனப்படும் குழாய் மிக குறுகியதாக காணப்படுவதால் தொற்றுக்கள் அதிகளவு ஏற்பட வாய்ப்புண்டு. அதிகளவான பெண்கள் தமது இனப்பெருக்க உறுப்புக்களை சுத்தமாக வைத்துக் கொள்ள தருவதால் பிற்காலத்தில் கருப்பை சம்பந்தப்பட்ட நோய்கள், சிறுநீரக தொற்றுக்கள் மற்றும் தோல் ஏற்படும் விதம் அதிகரித்துள்ளது.இயற்கையாக பூப்பெய்திய பெண்களில் திரவத்தன்மையான பதகரிதம் அதிகளவில் உருவாதல், துர்நாற்றம், நிறமாற்றம், என வேறுபடும்போது உடனே உரிய ஆலோசனைகளை பெற்று அதை முறையாக கவனித்து செயற்படல் வேண்டும். இதனால் உலகில் அதிகரித்து வரும் கருப்பை கழுத்து புற்றுநோய்களை தவிர்க்கலாம்.

இன்னும் உள்ளாடைகளை உரிய முறையில் சுத்தம் செய்தல், சூரிய ஒளிபட காயவிடல், தொடர்ந்து பழையனவற்றை பயன்படுத்தலை தவிர்த்தல் , ஒவ்வொருவரும் தமக்கென பிரத்தியேக உள்ளாடைகளை பயன்படுத்தல் என்பன மிக முக்கியமானவை.

சரும நோய்கள் எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் எம்மை தாக்க வாய்ப்புள்ளது. எனவே தோல் நோய்களிலிருந்து தவிர்ந்நு கொள்வது மிக முக்கியமாகும்.

***"நபி(ஸல்) அவர்கள் செருப்பு அணிவதிலும், தலை முடி சீவுவதிலும், சுத்தம் செய்வதிலும், தங்களின் எல்லா விஷயங்களையும் வலப்புறத்தைக் கொண்டு ஆரம்பிப்பதை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள்" என ஆயிஷா(ரலி) அறிவித்தார்.***

**ஸஹீஹ் புகாரி : 168**


எமது முத்திதழ் சஞ்சிகையின் மங்கையர் பகுதிக்கு
**அழகுக்கலை, சமையற் குறிப்புக்கள், பெண் சுகாதாரம், மருத்துவம் மற்றும் பெண்ணியம்**
தொடர்பான ஆக்கங்களை பின்வரும் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
074 08187 82
077 10 200 30
நீங்களும் எழுதலாம்!

## விவேகானந்தரின் பொன்மொழிகள்

- நன்மை பெற வேண்டுமானால் வாழும் தெய்வமாகிய மனிதர்களை வழிபடுங்கள் அதாவது ஒவ்வொரு மனிதனையும் நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள்
- கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கு தொண்டு செய்தவனாகிறோம்.
- ஏழைகளிடமும், மற்றவர்களிடமும், நோயுற்றவர்களிடமும் இறைவனைக் காண்பவனே அவரை உண்மையாக வணங்குபவனாவான்.
- எதிர்வாதம் எதுவுமின்றி குருவிற்குக் கீழ்ப்படிதலும் பிரம்மச்சிரியத்தைக் கண்டிப்பாக பின்பற்றுதலும் வெற்றி பெறுவதற்குரிய இரகசியங்களாகும்.
- தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறுகின்ற மிதமிஞ்சி அறிவும், ஆற்றலும் மனிதர்களை சாத்தான்களாக்கிவிடுகின்றன.
- இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல், படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவையாகும்.
- எதைக் கண்டும் அஞ்சாதீர்கள். அச்சமுள்ளவன் உலகில் வாழ்வதற்கு தகுதியற்றவன்.



**ரபீக் பாத்திமா பஸீஹா**
**12 கலைப்பிரிவு**
**அல்–ஹிதாயா ம.வி**

## பொது அறிவு

- உலகில் கிரிக்கெட்டுக்கான பிரட்மன் அருங்காட்சியகம் அமைந்துள்ள நாடு - ஆஸ்திரேலியா
- உலகிற்கு முதன்முதலில் தேசியக் கொடியை அறிமுகப்படுத்திய நாடு - டென்மார்க்
- பின்புறமாக மரமேறும் மிருகம் - கரடி
- ஆண்டுதோறும் உலக சூழல் தினம் கொண்டாடப்படும் நாள் - ஜூன் 5
- படித்த பெண்கள் அதிகம் உள்ள நாடு - இலங்கை
- தங்க ஆப்பிள் என அழைக்கப்படும் மரக்கறி - தக்காளிப்பழம்
- ரெட்கிளிக் எனப்படும் எல்லைக்கோட்டில் மூலம் பிரிக்கப்படும் இரண்டு ஆசிய நாடுகள் - இந்தியா , பாகிஸ்தான்
- மத்திய கோட்டினை தொட்டுச்செல்லும் ஏறி - தங்கனாக்கா
- 2019 ஆசிய உதைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற நாடு - கட்டார்



**M.L.M.MUJAHIR MUQSITH**
**GR. 08**
**T.R.K.M.HINDU COLLEGE**

## சூயஸ் கால்வாய்

**எம்.எப். நவால்**
அல்அஸ்ஹர் ம.வி, திஹாரி.



*சூயஸ் கால்வாய் என்பது மத்தியதரைக் கடல் மற்றும் செங்கடலை இணைக்க எகிப்தில் உள்ள சூயஸின் இஸ்த்மஸ் வழியாக வடக்கே தெற்கே ஓடும் ஒரு செயற்கை கடல் மட்ட நீர்வழியாகும். இந்த கால்வாய் ஆப்பிரிக்க கண்டத்தை ஆசியாவிலிருந்து பிரிக்கிறது.*

*இது ஐரோப்பாவிற்கும் இந்திய மற்றும் மேற்கு பசிபிக் பெருங்கடல்களைச் சுற்றியுள்ள நிலங்களுக்கும் இடையிலான மிகக் குறுகிய கடல் வழியை வழங்குகிறது.*

*இது உலகளவில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் கப்பல் பாதைகளில் ஒன்றாகும், இது உலக வர்த்தகத்தின் 12மூ க்கும் அதிகமான அளவைக் கொண்டுள்ளது.*

*எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் சரக்குகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அனுப்பப்படுவதற்கு இது ஒரு முக்கியமான இணைப்பை வழங்குகிறது.*

*சூயஸ் கால்வாய் ஆணையத்தின் (எஸ்சிஏ) தரவுகளின்படி, 2020 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 19,000 கப்பல்கள் அல்லது ஒரு நாளைக்கு சராசரியாக 51.5 கப்பல்கள், நிகர டன் 1.17 பில்லியன் டன் கால்வாய் வழியாக சென்றது.*

*இந்த கால்வாய் எகிப்தின் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய வருமான ஆதாரமாக உள்ளது, ஆப்பிரிக்க நாடு கடந்த ஆண்டு 5.61 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் ஈட்டியுள்ளது.*

*2015 ஆம் ஆண்டில், சூயஸ் கால்வாயை மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை எகிப்து அறிவித்தது, காத்திருப்பு நேரங்களைக் குறைத்து, 2023 க்குள் தினமும் கால்வாயைப் பயன்படுத்தக்கூடிய கப்பல்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குகிறது.*

*மத்திய கிழக்கில் சர்வதேச நெருக்கடி சூயஸ் நெருக்கடி, ஜூலை 1956 இல் எகிப்திய ஜனாதிபதி கமல் அப்தெல் நாசர் சூயஸ் கால் வாயை தேசியமயமாக்கியது. இந்த கால்வாய் பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் நலன்களால் கட்டுப்படுத்தப் பட்ட சூயஸ் கால்வாய் நிறுவ னத்திற்கு சொந்தமானது. கால் வாய் ஐந்து முறை மூடப்பட்டது. இது 8 ஆண்டுகளாக நீடித்ததிலிருந்து கடைசி நேரம் மிகவும் தீவிரமானது. கால்வாய் பின்னர் ஜூன் 1975 இல் வழிசெலுத்தலுக்காக மீண்டும் திறக்கப்பட்டது.*



# மாணவர் மடல்



## WhatsApp - 074 081 878 2

**மாணவர்களாகிய உங்களின் ஆக்கங்களையும் இதில் பிரசுரிக்க விரும்பினால் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மேலுள்ள வட்ஸ்அப் இலக்கத்துக்கு உங்கள் புகைப்படங்களுடன் அனுப்பி வையுங்கள்.**

# கவலை கொள்ளுங்கள்!

உங்களிடம் பணம் இல்லையே என வருந்த வேண்டாம். மாறாக உம்மைவிட ஏழ்மையானவர்கள் இருக்கிறார்களே என்று கவலைப்படுங்கள்

நல்லவர்கள் எம்மை விட்டு பிரிந்ததற்காக கவலை வேண்டாம். மாறாக கெட்டவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்று கவலைப்படுங்கள்.

தவறுகள் நடந்து விட்டன என்று கவலைப்பட வேண்டாம். இன்னும் அத்தவறை செய்கிறார்கள் என்று கவலைப்படுங்கள்.

இத்தனை வருடங்கள் வாழ்ந்து இருக்கிறார்கள் என்று பெருமை கொள்ள வேண்டாம். வாழ்ந்த காலத்தில் எதனையும் சாதிக்கவில்லை என்று கவலைப்படுங்கள்.

நாம் முஸ்லிம் என்று சொல்வதில் பெருமைப்படுங்கள். ஆனால் முஸ்லிம்களின் அடையாளம் எதுவும் இல்லையே என்று கவலைப்பட வேண்டும்.

அறிவியலில் ஆகாயத்தை முட்டும் வேளையில் இன்னும் நாம், மூதாதையரின் படிக்கும் இருப்பது எண்ணி கவலைப்படுங்கள்.

**சதீக் பாத்திமா ஷெய்னப்**
தரம் 10
அல்-மினா மகா வித்தியாலயம்



# என்னைப் பெற்ற அம்மா...!

என்னைப் பெற்ற அம்மா
300 நாள் என்னை ஆசையாய்
சுமந்திருந்தா
மூச்சடக்கி என்னை பெற்றெடுத்தா

முட்டிபோட்டு நா தவள
முத்தமிட்டு தவள வெச்சா
ஆராரோ பாடி என்ன ஆட்ட
அன்னாந்து நா பாத்தன் ஒ முகத்த

அந்த வேள தெரியாது அம்மா
தூக்கம் போச்சு என்று அரை
வயிறு கஞ்சி குடிச்சி... அரை நாள்
முழுக்க அயராது உழைச்சா...

நான் படிக்க வேண்டும் என்று
என்னை
குட்டி குட்டி பள்ளிக்கூடம்
போகச்சொன்னா
தட்டு நிறைய சோறு போட்டு
பசியாற வெச்சா... மகளே
படிமான்னு
பக்குவமாய் எடுத்துச் சொன்னா

படிச்சி பட்டம் எடுக்கும் போது நா
அம்மா முகத்தை பாத்தா... வலி
எல்லாம் போகும் காத்தா...
என்ட ஆசானே என்ன பெற்ற
அம்மாதா

என்ட அம்மாக்கு என்ன தந்தாலும்
ஈடாகாது... வயதானாலும்
விடமாட்டேன்
உன்னை உயிருள்ள வரை காப்பேன்
என் அம்மாவை



**Naleem Fathima Jesmin**
12 Arts,
T/Muslim Ladies college

# கல்வி

நம் வாழ்க்கைக்கு அவசியமானது கல்வி
அது நம்மிடம் இல்லை எனில்
நம் வாழ்க்கையே ஒரு கேள்வி

பல கனவுகளுடன் நீ படித்தாய்
உன் கற்பனையில் எண்ணியபடி
உன் வாழ்க்கை

விருப்பம் கொண்டு நீ படித்துப்பார்
உன் உயரம் அறியாத அளவுக்கு நீ
உயர்வாய்

உன் இளமை வாழ்க்கையில்
பல ஆசைகள் உன்னிடம் வரலாம்
அதனை நீ அகற்றிவிட்டு
உன் படிப்பின் மீது ஆசை வைத்துப்பார்
இந்த உலகம் உன்னை கைவசமாகும்

எவரேனும் கண்களை மூடி கற்பனை
செய்யலாம்
ஆனால் நீ கண் திறந்து படித்துப்பார்
உன் கற்பனைப்படி உன் வாழ்க்கை
அமையும்

கல்வி வேதனை என எண்ணாதே
அதுவே சாதனையாக்கும் உன்
வாழ்க்கையை

சிறப்பாக நீ படித்துப்பார்
உனக்கு தெரியாதவர்களிடம் இருந்து
நீ அறியாத விதத்தில் மரியாதை கிடைக்கும்




**ஆர்.எப்.ஹஸ்னி**
மனாருல் ஹுதா மகளிர் கல்லூரி
பெண்கள் பிரிவு

# என் நட்பு



கண்ணீரில்
மூழ்கியிருக்க பல
கவலைகள் சூழ்ந்திருந்து
உலகை வெறுத்தவேளை
நம்பிக்கையே உருவம் கொண்டு
நண்பி நான் தான்
என்று பெயர் கொண்டு
திகைத்தேன்
உலகை வலமே சென்றோம்
வையகம் வியக்க வாழ்த்தும்
பாடினோம்
கேலிகள் எனும் கோலமதிலே
கொஞ்சி விளையாடினோம்
நட்பே வாழ்க!



**J.F. HANAN**
T/Mu/MMLC,
Grade 11

# அரிஸ்டோட்டிலும் சிறுவனும்

அரசியல் தந்தை என வர்ணிக்கப்படும் அரிஸ்டோட்டில் ஒரு நாள் மாலைப் பொழுதில் கடற்கரையோரத்தில் அமர்ந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தார். அக்கடற்கரை கரையில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் மீது அவர் பார்வை விழுந்தது.

அச்சிறுவன் ஒரு சிறு கரண்டியால் கடல் நீரை அள்ளி சிறிய குழியில் ஊற்றிக் கொண்டிருந்தான். இதனை அவதானித்த அரிஸ்டோட்டில் அவனை அழைத்து என்ன செய்கிறாய்? என வினவினார். அதற்கு அவன் கடல் நீரை எல்லாம் இக்குழியில் நிரப்பிக் கொண்டிருக்கின்றேன் என பதில் கூறினான். இதைக் கேட்ட அரிஸ்டோட்டில் கரண்டியைக் கொண்டு இதனை உன்னால் எப்படி நிரப்பிட முடியும் என மீண்டும் அவனிடம் கேட்டார்.

அதற்கு அச்சிறுவன் இப்பிரபஞ்சம் முழுவதையும் உங்கள் அறிவைக் கொண்டு அடக்கிட முடியும் என நீங்கள் நினைக்கின்ற போது என்னால் மட்டும் ஏன் இதனை நிரப்பிவிட முடியாது? என நிதானமாக பதில் கூறினால். இதை கேட்ட அரிஸ்டோட்டில் உலகில் நான் மட்டும் அறிவாளி என்ற கர்வத்தை விட்டு விட்டார்.



**என்.எம்.யூஸுப் ஹனானி**
தரம் 06
அல்ஹிலால் மத்திய கல்லூரி



## விளையாட்டுச் செய்திகள்












### MCB T20i - 2021
### இறுதிப்போட்டி சம்பியனாக AC விளையாட்டுக் கழகம் தேர்வு

மூதூர் கிரிக்கட் வாரியத்தின் அனுசரணையோடு 2021 ஆம் ஆண்டுக்கான T20i கிரிக்கட் சுற்றுப்போட்டி இறுதி போட்டியில் AC vs Iraq விளையாட்டுக் கழகங்கள் மோதிக்கொண்ட நிலையில் சம்பியனாக AC Sport Club தெரிவானது.

இப்போட்டி நிகழ்வில் பிரதம அதிதிகளாக பிரதேச சபை தவிசாளர் எம்.அருஸ், மூதூர் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் எம்.நாஜின், விளையாட்டு சம்மேளன செயலாளர் எச்.அசாம், நடுத்தீவு RDS தலைவர் எம்.பர்ஹான் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி சுற்றுப்போட்டி MCB நிருவாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாக சபை தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் செயற்குழு ஊடாக சிறப்புற நடைபெற்று முடிந்தமை குறிப்பிடத்தக்கது.




















### Western Premiere League 2021
### WPL_2k21 (35) கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி

இன்று மூதூர் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஜாயா மற்றும் லெஜன்ட் விளையாட்டு கழகங்கள் மோதிக்கொண்டத்தில் ஜாயா விளையாட்டு கழகம் சம்பியனாக தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டி நிகழ்ச்சியின் பிரதம அதிதியாக தேசிய காங்கிரசின் தேசிய அமைப்பாளர் Dr. Mohamed Ziya மற்றும் நடுவர் குழாம் தலைவர் ஏ.எம்.பர்சாத், முத்திதழ் பிரதம ஆசிரியர் ஜே.எம். இஹ்ஷான், மூதூர் கிரிக்கட் அசோசியேஷன் தலைவர் எம்.நவாப், செயலாளர் எம்.சீ.எம்.முபஸ்ஸிர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முத்திதழ் குழுமம் சார்பில் 19 வயதின் கீழ் மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் இரட்டைச் சதம் அடித்து மாகாண சாதனை நிலை நாட்டிய **உனைஸ் நுபைல்** அவர்களுக்கு கௌரவ கிண்ணம் அளிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.





# “கல்வி மூலம் எதிர்பார்க்கின்ற சிறந்த மானிடத்தை இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்வி முறைமை வழங்கியுள்ளதா ...?

## - ஒரு தூரநோக்கான பார்வை



தொடர் - 02


**A. S. Mohammed Fousi**
B.A.Hons, M.A,PGDE
Teacher Educator (SLTES)
Lecturer - Uva NCOE Bandarawela.


*(ஆசிரிய வாண்மைத்துவத்தை பரீட்சித்துப் பார்க்கும் நோக்கில் மூதூர் வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்த கட்டுரை)*

இலங்கையின் கல்வி வரலாற்றினை சற்று பின்னோக்கிப் பார்க்கின்றபோது இந்த முற்படு முயற்சிகளின் யதார்த்தத் தையும் அதனால் ஏற்பட்ட, ஏற்பட்டு வருகின்ற அனு கூலங் களையும் விளங்கிக் கொள்ளலாம். பண்டைக் காலத்தில் இலங்கையில் குருகுலக் கல்வி முறையின் மூலம் குறிப்பிட்ட சிலரால் குறிப்பிட்ட சிலருக்கே கல்வியானது போதிக்கப்பட்டு வந்தது.

இதன் பயன்கள் ஒரு வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் ளேயே கிடைத்து வந்தன. இது ஆறுமுக நாவலர் முதலிய வர்களால் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்ட போதிலும் முற்று முழுதான கல்விக் கருவூலத்தை அனைவராலும் அரவ ணைத்துக் கொள்ளும் வாய்ப்பு எட்டாக் கனியாகவே இருந்து வந்தது. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் இலங்கையின் கல்வி முறைமையில் 06 தொடக்கம் 14 வயது வரையான மாணவர்களுக்கு கட்டாயம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை 1940 இல் C.W.W. கன்னங்கரா தலை மையில் அமைக்கப்பட்ட 'கல்வி விஷேட ஆணைக்குழு' முன்வைத்தது. இதனோடு சேர்த்து, 'தாய்மொழிக் கல்வி', 'இலவசக் கல்வி' (பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை மாணவர்களுக்குக் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும்) போன்ற சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டன. இதன் பயனாகவே 1945 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி இலவசக் கல்வி முறைமை உத்தியோக பூர்வமாக அமுலுக்கு வந்தது. இதுவே இலங்கையின் கல்வி வளர்ச் சியின் மைல் கல்லாகவும் அமைந்தது எனலாம். பாடசா லைக்குச் சென்று கல்வியைப் பெறமுடியாதிருந்த ஏழை மாணவர்களுக்கும் கல்வியானது போய்ச் சேர்ந்தமை, பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் தொகை அதிகரித்தமை, பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையான கல்வி இலவசமாகக் கிடைத்தமை, இலவசப் பாடப் புத்தகம், இலவச மதிய உணவு, இலவசச் சீருடை என்பன காலத்திற்குக் காலம் வழங்கப்பட்டமை என்பன இதனூடாகக் கிடைக்கப் பெற்ற அனு கூலங்களாக அடையாளப்படுத்தலாம்.

இவற்றை விட, இலங்கையின் கல்வித்துறை விருத்திக்கான வேறு பல முன்னெடுப்புகளும் முஸ்தீபுகளும் தொடர்ந்தும் இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள், தேசிய கல்வி முறை யொன்றுக்கான ஆலோசனைகள் என்ற பெயரில் 1964 இல் கல்விச் சீர்திருத்தங்களை உள்ளடக்கிய 'வெள்ளையறிக்கை' ஒன்று வெளி யிடப்பட்டது. இதே போல 'பொதுக் கல்விச் சீர்திருத்தங்களுக்கான சிபாரிசுகள்' எனும் பெயரில் 1966 இல் மற்றுமொரு 'வெள்ளை யறிக்கை' வெளியிடப்பட்டது. அத்துடன் 1972 இல் 'கல்வியின் புதிய பாதை' எனும் பெயரிலும் சில சீர்திருத்த முயற்சிகள் இடம்பெற்றன. இவையெல்லாம் காலத்திற்குக் காலம் முன்னெடுக்கப்பட்டமைக் கான காரணம், கல்வியின் மூலம் அடைய எதிர்பார்க்கின்ற வாழ்விய லுக்கான வலுவூட்டல்களைச் செவ்வெனே நிறைவெற்றிக் கொள்ள முடியும் என்பதனாலேயாகும்.

1981 ஆம் ஆண்டு கல்விக் கொள்கை அறிக்கை, கல்விக் கொள்கை தொடர்பான புத்தாக்கங்கள், ஒருங்கிணைப்புச் சார்ந்த பணிகளில் ஈடுபடத்தக்கனவாக 'தேசிய கல்விக் கழகம்' (National Education Council) 'கல்வி அபிவருத்திச் சபை' (Education Devolopment Board) என்பனவற்றை உருவாக்குவது பற்றிக் குறிப்பிட்டி ருந்தது. தேவைக்கேற்ப ஆசிரியர் கல்வி, கலைத்திட்டம், பாடநூல்கள் தொடர்பான குழுக்கள் பலவற்றை நியமிக்கக் கூடியதாயும் கல்வி அபிவிருத்திச் சபை அமைய முடியுமென்றும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியது.

**(பார்வை நீளும்...)**

---



*பெயர்: நிசார் முகமட் பாஸில்*
*தந்தை: அப்துல் ஹமீட் நிசார்*
*தாய்: வகாப் முகமட் சித்தி மக்கீனா*
*பிறப்பு: 1996-12-06*
*பாடசாலை:*
*1-2:தி/ மூ/ ஆயிஷா வித்தியாலயம்*
*3-5: தி/ மூ/ ஜாயா வித்தியாலயம்*
*6-13: தி/ மூ/ மூதூர் மத்திய கல்லூரி*

*உயர் கல்வி: யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி*
*கற்கைநெறி: **Higher National Diploma in Mechatronics Engineering Technology Study World Lanka Campus, University of Bolton, B.ENG (Hons) Electrical and Electronics Engineering(Reading)***

அல்-ஹாஜ் நிசார் மற்றும் சித்தி மக்கீனா தம்பதிகளின் இறுதிப் புதல்வரே நிசார் முகமட் பாஸில் ஆவார்.சிறுபராயம் முதல் புத்தாக்க செயல்பாட்டில் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் இவர் போட்டிகள் எதிலும் கலந்து கொள்ளவில்லை.

பெற்றோரின் ஊக்குவிப்பு மற்றும் ஆக்க பூர்வமான ஒத்துழைப்பால் தரம்-12யில் *Institute of Engineers Srilanka (IESL)* நிறுவனத்தால் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற *Young Inventors of the year* போட்டியில் கலந்துகொண்டு தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 20 கண்டுபிடிப்புக்கலில் இவரது கண்டுபிடிப்பான *low cost multi-media projector* வும் தெரிவானது. அதே ஆண்டில் *Srilanka inventors Commission(SLIC)* யினால் நடாத்தப்பட்ட *Sahasak nimavum* போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவானது என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவர் தனது உயர் கல்வி செயற்பாடுகளின் போதும் பல கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*Passenger bus stop identifier* எனும் இவரது கண்டுபிடிப்பானது 2017ஆம் ஆண்டு *Srilanka inventors Commission(SLIC)*யினால் நடாத் தப்பட்ட *Sahasak nimavum* போட்டியில் தேசிய மட்டத்தில் பரிசில்கள் பெற்றது மற்றும் *University of Uwa* யினால் நடாத்தப்பட்ட *International Reserch Symposium*யிலும் பங்குபற்றி தனது புத்தாக்கத்தினை பதிவு செய்து கொண்டார்.



மற்றும் அவருடைய இறுதி ஆண்டிற்கான *Reserch project*யிற்காக *Automated Farming Robot* எனும் தன்னியக்க முறையில் இயங்கும் ஒரு ஆக்கத்தினை உருவாக்கி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருடைய முயற்சிக்கு மிக உறுதுணையாக இருந்த வர்கள் பெற்றோர் என்று கூறினால் ஈடாகாது.

**இவரது கண்டுபிடிப்புக்கள் :**

- Waste water Treatment plant
- Low cost multi-media
- Projector Passenger bus stop
- Identifier Energy saving
- Fan Automated railway gate
- Covid Detecting Attendance
- System Automated Farming
- Robot Hybrid Gas Stove(Pending)

அறிவியல் பகுதி

# திருநங்கை

## Transgender



உலகில் எந்தவொரு படைப்புக்கும் விதிவிலக்கு என்ற ஒன்று இறைவனால் உண்டாக்கப்படே இருக்கும். காரணம் இறைவன் தனது படைப்பின் ஆற்றலை முன்னுதாரணமாக விளக்குவதற்கே விதிவிலக்கு என்ற ஒன்றை நிர்பந்தமாக உண்டாக்குன்கிறான். பரிணாம வளர்ச்சியில் இறைவனை மறுக்கும் நாஸ்திகர்கள் சிந்தனைக்கு விதிவிலக்குகள் எப்போதும் பெரும் தலைவலிதான்....

**மானிட ஆண் பெண் :** மனித இனத்தின் பால் ரீதியான இருபால் என்று பலர் கூறுவார்கள். உண்மைதான். ஆனால் முப்பால் தோற்றம் சமகாலங்களில் பாரிய வகிபாகத்தை உலகளாவியரீதியாக பெற்று வருகின்றது. ஆண், பெண் என்ற இனத்தில் தனித்துவ உடலியல், உளவியல் அடையாளங்கள் உண்டு. திருநங்கைகள் விடயத்தில் இக்காரணி சற்று வித்தியாசமாக இனங்கானப்படுகின்றது. அவ்வகையில் இலிங்க வேறுபாடுகள், உளவியல்சார் வேறுபாடுகள் என்ற வகையில் திருநங்கைகளை இருவகையாக வேறுபடுத்த முடியும். திருநங்கைகள் தோற்றத்தில் உடலியல் ஓமோன்கள், னுயே, சூழல், என்பன செல்வாக்குச் செலுத்தும்.

DNA : நிறமூர்த்த குறியீட்டில் ஓஓ- என்பது பெண்ணையும் ஓலு- ஆணையும் குறிக்கும். ஆண் பெண் தீர்மானத்தில் ஆணே செல்வாக்குச் செலுத்துகின்றான். அதேபோன்று திரு நங்கை விடயத்தில் பெரும்பாலும் Y நிறமூர்த்தில் உண்டாகும் சில மாற்றங்கள் காரணமாகவே இந் நிலைமை உண்டாகின்றது. அதாவது ஒரு ஆனில்இருந்து தான்அதிகமான திருநங்கை உருவாக்க வாய்ப்பு அதிகம் என்று கூறலாம்.




**Niyas Aasha Falin**
Reading in B.Sc
SEUSL


DNA மாற்றங்கள் காரணமாக உடல் இலிங்க அங்கங்கள் மாற்றம் பெற்று இருக்கலாம். அதாவது ஆணின் இலிங்க உறுப்பு பெண்ணிலும், பெண்ணின் இலிங்க உறுப்பு ஆணிலும் உருவாக்கலாம். குறிப்பாக உடல் கட்டமைப்பு, தசை, குரல், மயிர் வளர்ச்சி என்பனவும் இதில் உள்ளடங்கும்.

**ஓமோன் :** மூளையின் பரிவகக்கீழ் பகுதியில் இருந்து சுரக்கப்படும் இலிங்க, உடல் இயல்புகளை தீர்மானிக்கும் ஓமோன்களான FSH, LH சுரப்பு செறிவுநிலை முக்கிய காரணியாக திகழும் ஆண், பெண், திருநங்கை விடயத்தில். சாதரணமாக இந்த ஒமொன்களே இலிங்க, மற்றும் பாலியல் மனநிலை மற்றும் இலிங்க புணரியாகத்தை தூண்டும் வேலையை செய்கிறது.

இவற்றில் உண்டாகும் குளறுபடி காரணமாக ஒரு ஆணுக்கு பெண்ணின் மனநிலையும் ஒரு பெண்ணுக்கு ஆணின் மனநிலையும் உண்டாகிட அடிப்படையாகும். பெரும்பாலான திருநங்கை விடயத்தில் ஓமோன்களின் சீரற்ற சுரப்பு நிலைமை அவர்களின் இயல்பான ஆண், பெண் என்ற நிலையை மாற்றிவிடுவதாக ஆய்வுகள் கூறுகின்றது.

**சூழல் :** சூழலை பொருத்தமட்டில் உடல் அமைப்பு, ஓமோன்கள் செல்வாக்கு செளுத்தமாட்டது. ஆனால் அவர்களின அன்றாட பழக்க வழக்கங்கள் மற்றும் நடை, உடை பாவனையில் சில மாற்றங்கள் ஆளுமை விருத்தியில் மாற்றங்கள் காணப்படும்.

உதாரணமாக, அதிகளவான பெண்கள் உள்ள சூழலில் பிறக்கும் அல்லது பழகும் ஆண் குழந்தை நடத்தை கோலம் பெண்களை ஒத்து அமைவது, அதுபோன்று ஆண்கள் உள்ள சூழலில் உள்ள பெண் குழந்தை ஆண்ணின் நடத்தை ஒத்து சாடுவதனை இது காட்டும்.

**குழந்தைப்பேறு :** இவற்றை தவிர திருநங்கைகள் திருமணம், மகற்பேறு நிலைமைகள் சற்று வேறுப்பட்ட நிலைப்பாட்டை குறிப்பாக DNA மாற்றம் கொண்ட உடலில் காணலாம். இவர்களினால் குழந்தை பெற்றுக்கொள்ளும் தகுதி நிலை பெறாதவர்களாக இருப்பார்கள். காரணம் இவர்களின் இலிங்க அங்கம் விருத்தியுறாத நிலையிலும் புனரி உருவாக்கம் தடைப்பட்ட நிலையும் காணப்படும்.

**உலகளாவிய அரங்கில் :** 18% பிறப்புகள் திருநங்கை மொத்த சனத்தொகையில் பிறக்கின்றது. இருந்தபோதும் இவற்றில் பெரும்பான்மை வெளிக்காட்டப்படாத மறைமுக நிலையில் இயல்பை கொண்டு காணப்படுகின்றது. சுமார் 8-9% மானவர்களே சமூக அரங்கில் வெளிக்காட்டப்படு கிறார்கள்.

சமூக அரங்கில் இவ்வாறானவர்களை இழிவாக நோக்கும் மனோநிலை காரணமாக இவர்கள் சமூக அந்தஸ்தை இழக்க நேரிடுகின்றது. இதனால் சமூகத்தில் இருந்து தூரமாக்கப்பட்டு அவர்க ளாகவே ஒதுங்கி வாழப்பழகுகின்றார்கள். இதன் தாக்கம் இம்மானிடர்கள் மூலம் சமூகம் அடையவேண்டிய அடைவுகளை இழக்கின்றது. திருமணம், சமய கலாசாரம் போன்றவற்றில் இவர்களின் வகிப்பகம் இழக்கப்படுகின்றது. இதனை மாற்றி அவர்களும் எங்களைப் போன்ற உளவியல், உடலியல் குணம் கொண்ட ஒரு மனித இனம் என்ற மனோநிலை சமூக அரங்கில் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். அத்தோடு சமூகத்தில் அவர்களுக்கான தனித்துவ இடம் வழங்கப்படுவதோடு அவர்களின் மனோ நிலையை உணர்ந்து ஆண், பெண் என்ற அங்கத்துவத்தில் இடமளித்தல் வேண்டும்.

**முஃமின்களுக்கு அல்லாஹ் அளித்துள்ள பொறுப்பு குர்ஆனின் முன்னால் இதயத்தை திறந்து வைக்க வேண்டும் என்பதாகும்.**

**“ மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள், அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா? ” [அல்குர்ஆன் 47:24]**



# தோப்பூர் வரலாறு

## புளியடியும், அதன் முக்கியத்துவமும்


**S.A.M. ASMY**
B.A,PGDE
Reporter (Navamani,Vidivelli)
Thoppur.




**பெப்ரவரி இதழ் தொடர்ச்சி...**

அதேபோன்று இலக்கிய ரீதியான முயற்சிகள் நிகழ்வுகள் பலவும் இங்கு அரங்கேறி இருக்கின்றது. சீராப்புராணம் பாடுதல், இஸ்லாமிய வரலாற்று நாடகங்கள் நடித்தல், நாட்டார் பாடல் பாடுதல் போன்றவற்றுடன், மகிந்தன் கம்பு என்ற பெயரில் தோப்பூர் மண்ணுக்கே உரித்தான கூத்து வடிவமும் காணப்பட்டுள்ளது. இங்கு சீறாப்புராணம் பாடுவதில் பெயர் பெற்றவர்களாக அப்துல் காதர் லெப்பை உமர் லெப்பை, முகம்மது சரீபு போன்றவர்கள் காணப்பட்டுள்ளதுடன், ஆண்களுக்கு நிகராக கவி பாடும் திறம் படைத்த பெண் வரகவியாக ஜென்னத் ( ஜென்னத்து கண்ணா) என்பவர் திகழ்ந்திருக்கின்றார்.

ஆரம்பகால தபால் நிலையமானது புளியடியில் உள்ள சின்னப் பள்ளிவாயலுக்கு வகுப்பு செய்யப்பட்டு நீண்ட காலமாக றெசாக் (கடை) யாக இருந்து வந்த வீட்டிலேயே இயங்கியுள்ளது. இவ்வீட்டினை "கொட்டியார்க் கண்ணா" என்பவரே பள்ளிக்கு வக்ப் செய்துள்ளார். இவரின் இயற்பெயர் அறிய முடியவில்லை. அதே போன்று ஆரம்பத்தில் தோப்பூர் கிராமிய வைத்தியசாலையானது தற்போது பாத்திமா மகளிர் கல்லூரியின் ஆராதனை மண்டபம் இருந்த இடத்திலேயே இயங்கியுள்ளது. தபால் நிலையம் ஆனது சின்ன பள்ளியின் அருகிலிருந்து பிற்காலத்தில் போட்டாஅடியில் உள்ள வஹாப் (முஅத்தின்) அவர்களின் வீட்டிற்கு மாற்றப்பட்ட பின்னர் மார்க்கஸ் அருகில் நு.ர.மஃரூப் அவர்களினால் வழங்கப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு இயங்கியுள்ளது. பின்னர் 2001 ஆம் ஆண்டு தற்போது உள்ள நிரந்தர தபால் அலுவலக கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த புளியடி மைதானத்தின் நடுவில் ஆரம்பத்தில் பொதுக் கிணறு ஒன்று காணப்பட்டது. இதனை மக்கள் தங்களின் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தி வந்தார்கள். நீர் குழாய் இணைப்பு பொருத்தப்படாத ஆரம்ப காலத்தில் பொதுக் கிணறுகளே மக்களின் தேவையை நிறைவு செய்தது. இக்கிணறானது பிற்காலத்தில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்டமையினால் 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூடப்பட்டுள்ளது.



# போதைப்பொருள் பாவனையும் இன்றைய இளைஞர் சமுதாயமும்"




**அப்துல் நஸீர் நௌபாத்**
உளவியல் ஆலோசகர்
திருகோணமலை


உலகமானது இன்று உள்ளங்கை அளவு சுருங்கிக் காணப்படுகின்ற அளவிற்கு தொழில்நுட்பமும் கண்டுபிடிப்புகளும் அதிகரித்துக் கொண்டு செல்கின்ற அதே வேளை நேரடியாகவும் மறைமுகமாகவும் இளம் எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகி வருகின்றது. இதற்கு பிரதான காரணம் போதை பொருள் பாவனையும் அதன் பரம்பலும் என்றால் மிகையாகாது.

இன்றைய காலகட்டத்தில் மனித சமுதாயத்தால் எதிர்கொள்ள முடியாத அளவுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக இந்த போதைப்பொருள் பாவனை காணப்படுவதை யாராலும் மறுக்கமுடியாது. பல இளைஞர்கள் போதை பொருள் என்றால் என்ன? அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை ? மாற்றங்கள் எவை ? இதனால் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை அறியாது அதற்கு அடிமையாகவும் இதனை ஒரு கலாச்சாரமாகவும் தன்னைத்தானே இழந்தவர்களாகவும் காணப்படுகின்றமை வேதனைகுரிய விடயமாகும்.

உண்மையில் போதைப் பொருள் என்பது மனிதனுக்கு மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, அவனை தூண்டக்கூடிய, அவனது சுய புத்தியையும், சிந்தனையையும் மழுங்கடிக்கச் செய்யும் எந்தவொரு மருந்தும் பொருளயாகும். இதனால் ஒரு மனிதனுக்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் ,சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல்வேறு விளைகள் ஏற்படுகின்றன.

போதைப் பொருளானது பண்டைய காலம் தொட்டு காணபட்டாலும் இன்று அதன் பயன்பாடுகள் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக புதிய பரிணாமம் பெற்று சமுதாயத்தை சீரழிக்கக் கூடிய ஒன்றாக வியாபித்து காணப்படுகின்றது. அதிலும் போதைப் பொருளை பாவிப்பதன் ஊடாக ஒரு மனித மூளையில் டோபமைன் என்னும் மகிழ்ச்சி உணர்வு தூண்டப்படுகிறது , இந்த மகிழ்ச்சி உணர்வானது தன்னை அறியாமலேயே தன் மூளையால் உருவாக்கப்படுகின்ற ஒன்றாக காணப்படுகின்றது அதனால்தான் தன்னை அறியாமல் இவ் மகிழ்ச்சி உணர்வு தூண்டப்பட்டு அதிகமான மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதிகமாக இப் போதையை பாவிக்கின்றார்கள்.

இப் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக 1988ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு மாநாடு நடைபெற்று , வருடம் தோறும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது . மேலும் இதன் பாவனையைத் தடுப்பதற்காகவும்ஒழிப்பதற்காகவும் உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகள் பல்வேறு விதமான சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்திருக்கின்றன. அந்த வகையில் சில நாடுகளில் இக் குற்றத்திற்கு மரண தண்டனையையும் அமுல்படுத்தப்படுகின்றது .

இலங்கையை பொறுத்தவரை இதன் பாவனையும் கடத்தல்களும் அதிகரித்துக்கொண்டு காணப்படுகின்ற அதேவேளை இதற்கு எதிராக பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசும் இதற்கு எதிராக கடுமையான பல்வேறு சட்டங்களையும் அமுல்படுத்தியுள்ளது.

இரண்டாயிரத்துக்கு முற்பட்ட காலங்களில் 35 தொடக்கம் 65 வயதுக்கு இடைப்பட்டவர்களின் பாவனை அதிகமாக காணப்பட்டது. ஆனால் இரண்டாயிரத்துக்கு பிற்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை 15 தொடக்கம் 65 வயதுக்கு உட்பட்டவர்களின் பாவனை அதிகரித்துக் கொண்டு காணப்படுகின்ற போதிலும் இளைஞர்களின் பாவனையும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் விளைவுகளும் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புகளும் அதிகரித்து கொண்டே காணப்படுகின்றன.

தொடர்ந்து போதை பொருளுக்கு எவ்வாறு அடிமையாகின்றார்கள் அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன மற்றும் எவ்வாறு பாவனையில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணுதல், இவர்களை எவ்வாறு பழக்கத்திலிருந்து விடுபட செய்தல் என்பதை பார்க்கலாம்.

## கேள்விக்குறியாகும் ?

# கடினப் பந்து விளையாட்டு மைதானம்

•MUTUR JMI•




நவீன வளங்களைக் கொண்ட தரமான விளையாட்டு மைதானம் ஒன்றின் தேவை மிக அண்மைய நாட்களாக தேவைப்படுவதை எம்மால் உணரமுடிகின்றது. குறிப்பாக மூதூர் பிரதேசத்தில் கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டு துறைக்கான நவீன வசதிகளுடன் கூடிய ஒரு விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட வேண்டும்.

வெறுமனே 8 ஆண்டுகளுக்குள் துரித வளர்ச்சியை காண்பித்துள்ளது கடினப் பந்து கிரிக்கெட் வரலாறு எதிர்காலங்களில் பல்வேறு வளர்ச்சிக்கான உள்ள நிலையில் அதற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது எம் சமூகத்தின் கடமையாகவுள்ளது.

மூதூர் பிராந்தியத்தை பொறுத்த வரையில் 32 கடின பந்து கிரிக்கெட் அணிகள் இதுவரை பதிவாகியுள்ளன. அதே போன்று தோப்பூர் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட அணிகளாக 26 அணிகள் இயக்கத்தில் உள்ளன.

கிராம சேவகர் பிரிவுகளில் இருந்தும் தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கம், பௌத்தர்கள் என்று பல்லினத்தை சார்ந்த இளைஞர்கள் கழகங்களில் அங்கத்துவம் பெறுகின்றார்கள். விளையாட்டுத் துறையின் ஊடாக வளர்ப்பதற்கு ஒரு இருப்பது இளைஞர் யுவதிகள் போதைப்பொருள் மற்றும் ஏனைய கலாசார சீர்கேடுகள் பாதுகாக்க விளையாட்டு ஒரு தளம் கையாளலாம். அத்தோடு எமது பிராந்தியத்தில் பாடசாலை மாணவர்கள் தற்போது கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டில் கூடிய கவனம் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

மூதூர் நகர்ப்புற பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் கடினப்பட்டு விளையாட்டு மைதானமாக மூதூர் பொது விளையாட்டு மைதானம் மற்றும் மூதூர் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் பயன்படுத்தப்படுகின்றன. இருந்தபோதும் குறித்த இரு மைதானங்களில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கான வசதிகளான ஓய்வறை, பயிற்சி அறை, பயிற்சித் தளம், சேமிப்பு அறை, குளியலறை, பார்வையாளர் அரங்கு, வாகனத் தரிப்பிடம் மற்றும் இலக்க காட்சி பதாகை என்பன பற்றாக்குறையாகவே இன்று வரை தொடர்கின்றது. குறிப்பாக நகரத்தில் அமைந்துள்ள இவ்விரு மைதானங்களும் போதிய இடவசதி இன்மை பெரியதொரு குறையாக இருக்கின்றது.



அத்தோடு இவ்விரு மைதானத்தில் கால்பந்து விளையாட்டும் குறிப்பிட்ட சில காலங்களில் நடைபெறுவதனால் பயிற்சி மற்றும் தொடர் போட்டிகள் இடை நிறுத்த வேண்டிய துர்பாக்கிய நிலைக்கும் விளையாட்டு அணிகள் தள்ளப்படுகின்றன. இருந்தபோதும் தங்களுக்குள் காணப்படுகின்ற பற்றாக்குறையை கருத்திற்கொள்ளாமல் பதிவு செய்யப்பட்ட 32 அணிகளும் தங்களின் சிறப்பு விளையாட்டை வெளிகாட்டி வருவது உண்மையில் பாராட்டுக்குரிய விடயமாகும்.

மூதூர் பிரதேச சபைக்கு சொந்தமான எல்லைக்குள் எதிர்கால நடவடிக்கைகளுக்காக விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான தளமாக இறால்குழி, அறபா நகர், உப்புக்காச்சி மடுவு மற்றும் கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய பகுதியில் காணப்படும் குப்பைமேடுகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது அறியக்கிடைத்துள்ளது. 6 ஏக்கர் பரப்பளவு கொண்ட குறித்த காணி மிக அவசரமாக பாவனைக்கு உகந்தாற்போல் நவீன வசதிகள் கொண்ட கடினப்பந்து கிரிகட் மைதானமாக மாற்றியமைக்க வேண்டிய கட்டாய நிலைக்கு விளை யாட்டு துறைசார்ந்த தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக பிரதேச சபை தவிசாளர், விளையாட்டு கழகங்கள், அரசியல் பிரமுகர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றவர்களோடு பொதுமக்கள், கல்விசார் தரப்பினர் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று முத்திதழ் குழுமம் சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். பூரண செப்பனிட்டு கொடுக்க எமது ஊர் அரசியல்வாதிகள், பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்விடயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென பொது மக்கள் சார்பில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

**மூதூர் பிரதேச சபைக்கு சொந்தமான எல்லைக்குள் எதிர்கால நடவடிக்கைகளுக்காக விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான தளமாக இறால்குழி, அறபா நகர், உப்புக்காச்சி மடுவு மற்றும் கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய பகுதியில் காணப்படும் குப்பை மேடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது அறியக்கிடைத்துள்ளது.**

**தேடல் தொடரும்....**

**இவ்வாறான சமூகப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதில் எதிர்காலத்தில் முத்திதழ் குழுமம் கவனம் செலுத்தும்.!**

# வெற்றியின் திறப்பு...!

நீ எழு....!
விழவேண்டும்
விதை விழாமல்
எழுவதில்லை மரம்..!

விழுந்தெழு..!
விடியல்கள் உனதாகும்,
மனம் திறந்தெழு,
முயற்சிகள் இனிதாகும்...!

குழந்தைகள் தவழ்வது
எழுவதற்கு..
தத்தி தத்தி விழுவது,
நடப்பதற்கு..!

வாழ்வில் விழுவது
அழுவதற்கல்ல..
மீண்டெழுவதற்கு..
நற்தருணங்கள்
நம்மை அடைவதற்கு..!

தோல்வியெனும்
படியில் ஏறாமல் நீ
வெற்றியின் கதவை
திறக்க இயலாது !

வெற்றியின் திறப்பு
தோல்வியிடம்தான்
இருக்கிறது...!

தோற்றுப்பார் !
தேடல் புதிதாகும்..
விட்டுக் கொடுத்துப்பார்,
வாழ்க்கை அழகாகும்...!

அபு நசீர் தோப்பூர் -



# விழிகள் பேசும் மொழிகள்

விழிதரு பேசும் மொழிகள் ஏந்தும்..
செழிதரு முகத்தில் நவரசம் சிந்தும்..
மொழிதரு தமிழோ அதிலே கொஞ்சும்..
வழிதரு நேத்திரம் வார்த்தையில் மாந்தும்
விழிகள் பேசும் மொழிகள் புதினம்...
கிளிகள் கோதாக் கனிகளின் வதனம்...
எழில் முகம்  நவரசத்தின் நளினம்...
செழில் தரு தரிசனம் ஏந்தும்...
பதியென எனை கருவிழிக்குள் பதித்து..
மதியவள் விரல் தொட நொந்து..
உளியது செதுக்கிய சிற்பமாய் இருப்பினும்
வளியென மாறி வருடிச் சென்றாள்..
மாடு நின்றனை நோக்கக் காதல்...
கூடும் விழியின் மொழியில் மோதல்...
வாடும் நெஞ்சம் கண்ணில் வாட்டம்...
பாடும் விழிகள் பரவசம் காட்டும்...
உதரம் நிறைந்த கருவில் பெண்மை...
அதரம் சொல்லும் அசைவில் கண்ணும்...
விரதம் பூணும் உடலின் பார்வை...
பரதம் ஆடும் விழிகள் அசைவில்...
பிச்சை வேண்டும் யாசகன் விழியும்...
தாயைத் தேடும் குழந்தை விழியும்...
மரணம் வந்து மூடும் விழியும்...
பேசும் மொழிகள் வேறாய் விழிக்கும்...

-சம்பூர் சச்சிதானந்தம்-



# வீழ்வாயோ தமிழே!

சங்கம் வளர்த்து சரிநிகர் கண்டது.
பங்கமின்றி பண்போடு கலாசாரம் தந்தது.
வீறுகொண்டு வீரத்தோடு வெற்றிநடை போட்டது.
நீறுபூத்த நெருப்பாய் நெறிபிறழாது நின்றது.

நிலையில்லா உலகில் நிலைத்து வென்றது.
கலைகள் தந்து காத்து வந்தது.
அடையாளச் சின்னமாய் எழுந்து உயர்ந்தது.
தடையின்றி தனித்துவமாய் எங்கும் விளங்கியது.

ஆதியில் பிறந்து அண்டமெல்லாம் அளந்தது.
சாதியின்றி அனைவர்க்கும் சமத்துவம் தந்தது.
சூழும் கலியை வீரத்தோடு விரட்டியது.
வீழாது விலைபோகாது தலைநிமிர்ந்த என் தமிழ்!



சம்பூரணி -
சுஜந்தினி யுவராஜா


உங்களது
கவிதைகளையும்
இப்பக்கத்தில் பிரசுரிக்க
விரும்பினால்
கீழுள்ள
WhatsApp இலக்கத்திற்கு
உங்கள் புகைப்படத்துடன்
எமக்கு அனுப்பி வைக்கவும்.
077 1663140


# பெண்ணே! கவனமாய் இரு !!!

சில காம வெறிநாய்களின்
கண்களை கண்காணித்து கொண்டு
இருப்பாயா. பெண்ணே!!!!!

கழிப்பறையில் கவனம்...!
குளியறையில் கவனம்...!
படுக்கையறையில் கவனம்...!
பள்ளியறையில் கவனம்...!
அலுவலகறையில் கவனம்...!
பேருந்து பயணத்தில் கவனம்...!
இரயில் பயணத்தில் கவனம்...!
பாலூட்டும் அறையில் கவனம்...!
மருத்துவறையிலும் கவனம்...!
ஆடை மாற்றும் அறையிலும் கவனம்...!
நீ
பெண் என்று தெரிந்து கொண்டால்
தாயின் கருவறையிலும்
கவனமாக இரு, பெண்ணே நீ
கடந்து போகும் பாதையை
கவனிப்பாயா....

அன்புடன் சப்ரான் சகோ



# தமிழெனும் பாவை

கன்னி மயிலொன்று
கருங்குழல் தோகை விரித்து
மான்விழி மையலில்
கார்முகில் சாந்துரசி
ஒயிலென நின்ற
ஒய்யார வான்மதியோ...?
அவள்
புறப்பொருள்
புருவங்கீழ், குறுந்தொகைக்
கண்களையும்
அகநா னூற்றைப்
பூசிய, நற்றிணை உதடுகளையும்
வைர - மூக்குத்தியாய்த்
திருக்குறளையும்
தேவார நெற்றியில்,
திருவாசகமாய்த்
செந்தூரமும்

செவிக்கு
அழகூட்டும்,
புறநா னூறு
வைரத்தோடு!

இவ்வரிய தமிழெனும்
பாவை முகம் காண..
என்ன பேறு பெற்றேனோ!



யான்: (மழைக்குருவி)
மனோஜா இரத்தினகுமார்

# எதைக் கண்டும் வியக்காதே !

எதைக் கண்டும் வியக்காதே !
எதைக் கண்டும் வியாக்காதே!
எதையும் பெரிதாய் நினைக்காதே!
மிகப்பெரிய வெற்றிகள் எல்லாம்
ஓரிரவில் பெற்றவை அல்ல!
மிகப்பெரிய மனிதர்கள் எல்லாம்
ஒஹரே நாளில் முளைத்தவர்கள் அல்ல!
கூரையில் வசிப்பவனுக்கு மாளிகை பிரம்மிப்புதான்!
ஏழையின் கண்களுக்கு எல்லாம் பிரம்மிப்புத்தான்!
பிரம்மித்து நிற்காதே மனிதா!
மாளிகையில் வாழ்வதும் மனிதன் தானே ?
நம்மைப் போல மண்ணில் பிறந்தன் தானே ?
வியந்து வியந்து பார்த்ததெல்லாம்
இதோ ! இன்றோடு முடியட்டும்!
நாளை என்பது நமக்காய் விடியட்டும்!
வியப்பு என்பது உன்வெற்றிக்கு - நீ
இட்டுக்கொள்ளும் வேகத்தடை!
முயற்சித்தால் முடியாதென்பதும்
இவ்வுலகில் இல்லை!
எதைக்கண்டும் வியக்காதே!



MM. SAKEEN
IQBAL RD, MUTUR.

சிறுகதை

மூதூர் முகைதீன்

# வேதத்தீவு



அப்போது எதிலும் தனது அடாவடித் தனத்தை முன்வைக்கும் ஒருவர் முன்னால் வந்து,

“இந்தப்பகுதியில முஸ்லிம் ஆட்களுக் குத்தான் காணி அதிகம். அதனால முதல்ல எங்களுக்குத்தான் தண்ணீரைத் தரணும்” என வீராய்ப்பாய் பேச மறுதரப்பிலிருந்து ஒருவர்

“இந்தக் காணியோட பெயரே வேதத்தீவு. அதனால எங்களுக்குத்தான் முதல்ல தண்ணீரைத் தரணும்” என தனது கருத்தை முன்வைத்தார்.

விடயம் வேறுபக்கம் திசை திரும்புவதை உணர்ந்த செபமாலை உடனே தனது அபிப் பிராயத்தை தெரிவிக்க முன்னுக்கு எழுந்து வந்து,

“எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்க. இப்போ எங்க எல்லோருக்கு முள்ள பிரச்சினை தண்ணீர்தான். இதை விட வேற கதை எதுவும் இங்கே பேச வேண்டிய அவசியமில்லை. முஸ்லிம் ஆட் களோ, வேதக்காரரோ என்று பார்த்து எந்த வயலுமே விளையிறதில்ல வானமும் இனம் பார்த்து மழை பொழியிறதில்ல. இவ்வளவு காலமும் இந்த பயனற்ற கதை யால்தான் நாம எல்லாக் கஷ்டத்தையும் அனுபவித்து வந்திருக்கோம். இங்கே பாருங்க, வேதத்தீவு என்பது ஒரு பெயர் தான். நாம இரண்டு இனத்திற்கும் இது சொந்தமானது. பெயரை வைத்து எதை யும் உரிமை கொண்டாட முடியாது. இதைவிட்டு நாம ஒற்றுமையா விளைஞ்ச பயிரை காப்பாற்ற பார்ப்போம்.” என மிகவும் உருக்கமாக செபமாலை பேசி முடித்ததும், அனைவரும் சற்று நேரம் அமைதியாக இருந்தனர்.

பின்னர் மஹ்மூது நாநா செபமாலையின் காதுக்குள் ஏதோ கூறிவிட்டு அங்கிருந்த வர்களை நோக்கி,

“நாம எல்லோரும் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் எல்லோருக்கும் நன்மை கிடைக்கும். இதற்காக நானும் செபமா லையும் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக் கோம். எங்க இரண்டு பேரிட வயலும் வாய்க்காலுக்கு அருகே உள்ள நீர் பாயக் கூடிய முதல் வயல் என்று உங்கள் எல்லோ ருக்கும் தெரியும். முறைப்படி எங்க இரண்டு பேரிட வயலுக்குத்தான் முதலில நீரைத் தாரதுதான் நியாயம். ஆனா இந்த இடத்தில உங்க எல்லோருக்காகவும் இதை விட்டுத்தாறம். எங்களுக்கு முதலில அந்த தண்ணீரைத் தரவேண்டாம். இந்த வேதத்தீவு வயல் முழுவதும் நீர் பாய்ந்த பிறகு கடைசியா நாங்க எடுக்கிறோம். சரிதானே?” மஹ்மூது நாநாவின் இந்தப்பேச்சை யாருமே எதிர்பார்க் கவில்லை.

இதனைக் கேட்ட அனைவரும் வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டு மௌனமா கினர். அப்போது அவ்விடத்தில் நின்ற விவசாய உத்தியோகத்தர்

“எல்லோரும் மஹ்மூது நாநாட ஆலோச னையை ஏற்றுக்கொண்டது போலத்தான் இருக்கு.. சரி இனிமே பிரச்சினை முடிந்த மாதிரித்தான். நானும் வட்டவிதானயாரும் ஒரு ஒழுங்கு முறையில் தண்ணீரைத்தாரம். நீங்க எல்லோரும் யோசிக்காம போங்க இரண்டு நாளைக்குள்ள எல்லா வயல்க ளுக்கும் தண்ணீர் கிடைச்சிடும்” எனக் கூறியதும் எல்லோரது முகத்திலும் திருப்தி காணப்பட்டது. அந்த மன நிறைவோடு சகலரும் பிரிந்து சென்றனர்.

செபமாலை, மஹ்மூது நானா ஆகியோரின் வயல்களை வாய்க்கால் பிரித்தாலும் அவர் களின் இதயங்களை அது இணைத்து வைத் துள்ளதை இந்தச் சம்பவத்தில் மூலமாக அப் பகுதி விவசாயிகள் உணர்ந்து கொண்டு அவர்களின் நல்ல குணத்தைப் பாராட்டி புகழ்ந்தனர்.

தோழர்கள் இருவரும் வேதத்தீவு ஆற்றைக் கடப்பதற்காக படகின்மீது ஏறி அமர்ந்து கொண்டனர். செபமாலையின் மனதில் சற்று பாரம் குறைந்தது போலிருந்தது.

“மஹ்மூது நாநா நாம விட்டுக் கொடுத்ததால பெரிய பிரச்சினையையே தடுத்திட்டோம். அதுவே போதும். நம்ம ஊரே இனி சந்தோ சமாகவும் ஒற்றுமையாகவும் இருக்கிறத்துக்கு இந்த வேதத்தீவுதான் வழிகாட்டப்போவுது என்று எனக்கென்னமோ அடிமனசில ஒரு நினைப்பு வந்திட்டுத்தான் இருக்கு.

“அப்படி நடந்தா அது எல்லோருக்கும் நல்லதுதான்” என மஹ்மூது நாநாவும் கூறி முடிக்க படகு இலுப்பச்சோலை துறையை வந்தடைந்தது.

வேதத்தீவு வயலில் உருவான இந்த சமரசமும், விட்டுக்கொடுப்பும் அனைவரையும் நிச்சயம் சிந்திக்கவே வைக்கும். எதிர் காலத்தில் இவ்விரு சமூகமும் ஒற்றுமையாக வாழ்வ தற்கு இந்த வேதத்தீவு சம்பவம் ஒரு அடித்தள மாகவே விளங்கும் என்பதை அனைவரி னதும் முகபாவத்திலிருந்து இருவரும் புரிந்து கொண்டனர்.

அன்றிரவு நேரத்துடன் உணவருந்திவிட்டு மஹ்மூது நாநா தூங்குவதற்காக ஆயத்த மானபோது வானத்தில் பலத்த இடியுடன் மின்னலும் பளிச்சிட வெளியே வந்து பார்த் தார். மழைநீர் சொட்டுச் சொட்டாக நிலத் தில் விழுந்துகொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் சோ வென்ற பேரிரைச் சலுடன் பெரும்மழையே பொழிந்து முற்றத்தை வெள்ளத்தால் நிரப்பியது. மஹ்மூது நாநாவிற்கு அளவிடமுடியாத ஆனந்தம். அந்தநேரத்தில் செபமாலையை சந்தித்து அந்த மகிழ்ச்சியைப் பங்குபோட வேண்டும் என அவர் உள்ளம் துடித்தது.

நல்ல உள்ளங்களின் நல்ல செயல்களுக்கு இறைவன் கொடுத்த பரிசு இதுவென நினைத்துப் பூரிப்படைந்தார் மஹ்மூது நாநா. இவர்களின் ஒற்றுமைக்கு இறைவனின் அனுக்கிரகமும் கிடைத்துவிட்டது போன்று இப்போது பொழிந்து கொண்டிருக்கும் மழையும் இதற்கு சாட்சியாக கட்டியம் கூறியது.

இனிமேல் வயலுக்கு தண்ணீர் பிரச்சினையே இல்லை என்ற பெரும் திருப்தியுடன் அவர் நிம்மதியாகத் தூங்கச் சென்றார்.

**முற்றும்.**

---

## உயரப்பார்



கே. திருச்செல்வம்

மலரொளி பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். தன் வீட்டில் மூத்த பிள்ளை. அவளுக்குப் பின்னர் மூன்று பிள்ளைகள். அனைவரும் பெண் பிள்ளைகள். தந்தை செல் அடிபட்டு ஒரு காலையும் ஒரு கண்ணையும் இழந்தவர். அம்மா கடலை வறுத்து விற்பது, காலையில் இடியப்பம் செய்து விற்பது. இவை தான் அவர்களின் குடும்ப வருமானம். தங்களது அன்றாட உணவிற்குப் போதுமானதாக இருந்தது. தனது தங்கைகள் மீது மலரொளி உயிராக அன்பு வைத்திருந்தாள். அவர்களது பள்ளிச் செலவிற்கு பள்ளி நிருவாகத்தினர் எதுவும் கேட்பதில்லை. அவர்களது குடும்ப நிலை அனைவருக்கும் தெரிந்திருந்தது. பக்கத்து வீட்டில் சித்தி இருந்தாள். இராசவள்ளி கிழங்கு நடுவதற்கு மலரொளியை அழைத்தார்கள். சிறிய தொகை பணம் கிடைக்கும். சென்றவளுக்கு சித்தி நூறு ரூபாய் பணமும் இரண்டு கிலோ கிழங்கும் கொடுத்துவிட்டாள். கிழங்கை கறி சமையுங்கள் அல்லது பொரித்து சாப்பிடுங்கள் என்பதே சித்தியின் அறிவுரை. மலரொளிக்கு அதனை நாமும் நட்டால் என்ன என்ற எண்ணம் வர அதனைச் செய்தாள்.

ஆனால் சித்தி போன்று நடவில்லை. பக்கத்தில் இருந்த சிறிய அரிசி ஆலைக்குச் சென்று உரப்பையில் உமி எடுத்து வந்தாள். கிழங்கு நடுவதற்குத் தயாரித்த நாற்று மேடையில் உமியைக் கலந்தாள். பள்ளியில் விவசாயப் பாட ஆசிரியர் கற்பித்தவை நினைவில் வந்தது. பக்கத்து வகுப்பில் நடக்கும் பாடத்திற்கும் காது கொடுக்கும் பழக்கம் இருந்தது மலரொளிக்கு. மாலை நேரத்தில் அம்மாவின் உதவியுடன் இரண்டு கிலோ கிழங்கையும் நட்டார்கள்.

ஒவ்வொரு நாளும் தானும் தங்கைகளின் உதவியுடன் நீர் ஊற்றினாள். சித்திக்கு விடயம் தெரிய வர மகிழ்ந்தாள். அறுவடை நேரத்தில் தன்னைவிட நான்கு மடங்கு அதிகமான கிழங்குகள் பிடுங்கிய மலரொளியை அதிசயமாகப் பார்த்தாள். சித்திக்கு காரணத்தை கூறினாள் மலரொளி. கிழங்கை அவள் விற்கவில்லை. முழுவதையும் விதைக்காக வைத்தாள். விவசாயத் திணைக்களத்திற்குச் சென்று அம்மா ஆலோசனை கேட்டு வந்தாள். மானிய உதவிகளும் கிடைத்தது. விவசாயப் போதனாசிரியர் வழிகாட்டல்களைச் செய்தார். அடுத்த ஆண்டு அப்பிரதேசத்திலேயே அதிக விளைச்சல் மலரொளிக்கு கிடைத்தது. தனது மற்றும் தனது தங்கைகளின் பள்ளித் தேவைகளை தானே பார்க்குமளவிற்கு வளர்ந்துவிட்டாள் மலரொளி.

பள்ளியில் நல்ல வரவேற்பினை சகோதரிகள் ஆசிரியர்களிடம் பெற்றிருந்தார்கள். சாதாரண தரத் தேர்வில் சிறந்த பெறுபேறு கிடைத்தது. ஆனாலும் கலைப்பிரிவில் படித்தாள். பள்ளியில் மூன்றாவது சிறந்த பெறுபேற்றினை உயர்தரத்தில் பெற்றாள். தங்கைகளை இராசவள்ளி உற்பத்திக்கு பழக்கப்படுத்தியிருந்தாள். பல்கலைக்கழகப்படிப்பு இராசவள்ளியின் உதவியினால் முடித்தாள்.

பிரதேச செயலகத்தில் வேலை கிடைத்தது. சில ஆண்டுகளில் உதவி பிரதேச செயலகர் ஆனாள். இராசவள்ளி என்று ஊரில் மலரொளியை இன்றும் அழைப்பதற்கான காரணம் இன்றும் அவள் அலுவலக நேரம் தவிர்ந்த நேரத்தில் இராசவள்ளி பயிர்ச்செய்கை செய்வதாலாகும்.



# தகவல் அறியும் சட்டம்

## அரச வரி விதிப்புக் கொள்கைகள் மற்றும் பொதுச்சொத்துக்கள்

எம்.எம். அஷ்பாக் அஹமட் LLB (Hons.)
ICASL – III
BBA (READING) SEUSL
DICA, AATSL,CAA
(NEITHAL NAGER)



இலங்கையாகிய எமது நாட்டிலே சாதாரண பொதுமக்களாகிய நாம் அன்றாடம் பல செலவுகளை மேற்கொள்கின்றோம். இதனூடாக நாம் அரசுக்கு வரி என்ற ஒரு வகையான கட்டணத்தை வழங்கி வருமானத்தை ஈட்டிக் கொடுகின்றோம். இதுவே அரசின் பிரதான வருமான மூலமாக உள்ளது.

வரியானது நாம் செலுத்துவது நமக்கு தெரியக் கூடியாக இருப்பின் அது நேர் வரியாகவும். அதுவே நாம் வரிசெலுத்துகையில் அது செலுத்தும் அளவு வீதம் நமக்கு தெரியாது இருப்பின் அது நேரில் வரியாகவும் காணப்படுகின்றது.இவ்வாறான வரிகளே நாம் இன்று அதிகமாக செலுத்துகிறோம்.

அன்றாடம் நாம் ஒவ்வொரு மேற்கொள்ளும் எல்லா செலவுகளிலும் ஏதோ ஒரு விதத்தில் வரி செலுத்திக்கொண்டேதான் வாழ்கின்றோம். நாம் அன்றாட தேவைகளுக்காக கொள்வனவு செய்யும் சீனி, மாவு ,தேயிலை, பருப்பு போன்ற அத்தியவசிய பொருட்களுடன் அதற்கு மேலதிகமாக கொள்வனவு செய்கின்ற ஆடம்பர பொருட்களாகிய ஆபரணங்கள், மோட்டார்கார், வீட்டுக்குத் தேவையான அலங்கார பொருட்கள் வரையான எல்லா வகையான பொருட்களின் விலைகளிலும் வரி உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறியோம். இவற்றைக் கொள்வனவு செய்கின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் நாம் அரசுக்கு வரி செலுத்துகின்றோம். என்பதையும் நாம் அறிய வேண்டும்.

இவ்வாறாக இருக்க அரசு தனது வரிவருமானத்தை அதிகரிக்க நினைக்கையிலும், குறைக்க நினைக்கைலும் அது சாதாரன மக்களாகிய எம்மில் பெரியலவிலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக வரிவருமானம் அதிகமாக அரசுக்கு தேவைப்படின் அது அத்தியவசிய பொருளின் விலையே அதிகரிக்கப்படுகின்றது. காரணம் அதுவே எமது கொள்வனவுதொகையில் மாற்றத்தை ஏற்படுத்தாது வரி வருமானத்தை அதிகரிப்பதாகும். அதுவே ஆடம்பரப் பொருட்களின் வரிவிதிப்பு கொள்வனவு தொகையை குறைத்து வரி வருமானத்தை குறைக்கக் கூடியதாகும்.

அவ் வரி விதிப்பினால் மக்களாகிய நாம் பல நன்மைகளையும் பெருகின்றோம் உதாரணமாக தீய பொருட்கள் ஆகிய மதுபானங்கள் நோய்களை ஏற்படுத்தக் கூடிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய மக்களுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய பொருட்கள்மீது விதிக்கப்படுகின்ற வரி விதிப்பின்போது அது மக்களை பாதுபாப்பதற்கான அரச வரி விதிப்பு கொள்கைகளாகும். இது மக்கள் நலனை அதிகரிக்கின்றது.

அரச வரிவருமானம் பொதுவாக அரச செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அரச வரி விதிப்பின் மூலம் அரசு மக்களுக்கிடையில் நியாயத்தன்மையை ஏற்படுத்துவதிலும் தாக்கம் செலுத்துகின்றது. உதாரணமாக அதிக வருமானம் பெறுகின்ற தனிநபர் மற்றும் கம்பனிகளிடமிருந்து வரியினை அறவீடு செய்து குறைவான வருமானமுடையவர்களுக்கான இலவசக்கல்வி மற்றும் சுகாதாரம் போக்குவரத்து குடிநீர் மின்சாரம் போன்ற செலவீனங்களை அரசு மேற்கொள்கின்றது.

இவ்வாறாக அரச பொதுச் சேவைகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் பொதுச்செலவுகள் என்பன ஏதோ ஒரு விதத்தில் நாம் செலுத்திய வரிப்பணத்தின் மூலமே எமக்கு கிடைக்கின்றது எனவே கிடைக்கப்பெறுகின்ற அரச சேவைகளை எமக்கு சேரவேண்டிய சேவைகளாக கருதி சரியான விதத்தில் பெற்றுக்கொள்வதுடன் பொதுச்சொத்துக் களையும் சரியாக பயன்படுத்தவேண்டும்.

முத்திதழ் நீ.. நான்.. நாம்...

# ரமழான் போட்டி நிகழ்ச்சி

**மூதூர் ஒன்லைன் வாசிகசாலை** WhatsApp குழுமத்தின் ஏற்பாட்டில் இவ்வருட ரமழான் மாதத்தை முன்னிட்டு விசேட ரமழான்போட்டிநிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**போட்டி விதிமுறை :**

- 20 வினாக்களை கொண்ட இப்போட்டி நிகழ்ச்சி ஒவ்வொரு நாளும் Online Mutur Library WhatsApp குழுமம் மற்றும் Mutur JMI, POP GROUP Facebook பக்கத்திலும் காட்சிப்படுத்தப்படும்.
- விடைகளை 0771663140 என்ற WhatsApp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.
- Mutur JMI Facebook page இல் பங்கேற்பு செய்பவர்கள் தங்கள் முகநூல் பக்கத்தில் குறித்த கேள்வியை Like & Share செய்தல் அவசியம்.
- போட்டியின் வெற்றியாளர்கள் பலர் தேர்வுசெய்யப்படுமிடத்து குலுக்கல் முறையில் வெற்றியாளர் தேர்வு செய்யப்படுவார்.

**பரிசு விபரம் :**

- First Prize - Android Smart Phone
- Second Prize - Android Smart Phone
- Third Prize - Android Smart Phone
- 4th and 5th Prizes - Smart Watch
- 05 Consolation Prizes- Gift Voucher



Online Mutur Library

077 102 0030 / 077 166 3140

# மூதூர் கல்வியின் நிலையும்

தொடர் - iii

## கல்விக்காக திருகோணமலை நகரை நோக்கிய படையெடுப்பும்

**4.5 கோடி செலவு –**

**நகரமயமாக்கலுக்குள் சிக்குண்டுபோகும் எமது குழந்தைகள் –**

**க.பொ.த உயர் தரத்தில் கிழக்கு மாகாணம் மூதூர் முதலிடம் –**

**மூதூர் பிள்ளைகளே இதுவரை திருகோணமலையில் சிறப்பு சித்தி –**

கல்வியும் போக்குவரத்தும் ஒரு பொருளாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாத இரு துறைகள் என்பதோடு ஒரு நாட்டின் சகலருக்கும் தேவையான விடயங்களுமாகும். இலங்கையில் படிப்பறிவு வீதம் 96.3% ஆகக் காணப்பட்டாலும் தற்போதைய காலப்பகுதியில் 100% மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதிகள் இலங்கையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வி, போக்குவரத்து ஆகிய இரண்டிலும் எது மிக முக்கியமானதென்று எழுப்பும் கேள்விக்கு விடை காண்பது சிரமமாக இருந்த போதிலும் ஒரளவு "கல்வி" தான் என்பதை எமது சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும். "கல்விக்கு" எமது சமூகம் எவ்வாறு முன்னுரிமை அளித்திருக்கின்றது என்பது இதிலிருந்து தெளிவாக விளங்குகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி என்று வகுக்கப்பட்டிருக்கின்ற கல்வி நிலையில், அதன் நிலையை அறிய ஒவ்வொரு மட்டத்திலும் பரீட்சைகளும் அமைந்து காணப்படுகின்றன. இவ்வாறான பரீட்சைகளில் மிக முக்கியமான பரீட்சைகளாக 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம், மற்றும் உயர்தரப் பரீட்சைகளை நாம் அறிந்துள்ளோம்.

இப்பரீட்சைகளை மையமாக வைத்தே ஒரு பிரதேசத்தின் கல்வி மட்டத்தையும், வலய கல்வியின் நிலையையும் அளவிடுகின்றனர். பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடையும் வீதத்தின் அடிப்படையில் கல்வி வலயம் எத்தனையாவது இடத்தில் அமைந்துள்ளது என நாடளாவிய ரீதியில் கணிக்கப்படுகின்றது. மூதூர் வலயக் கல்வி வலயத்திற்குள் உள்ள பாடசாலைகளின் அடைவு மட்டத்தின் நிலையின்படி 2019 ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலதிகமாக புள்ளிகளைப் பெற்று மாணவர்கள் சித்தியடைந்த வீதம்




**ஏ.எஸ்.எம்.பாயிஸ்,**
**திட்டமிடல் பணிப்பாளர் ,**
**சுகாதார அமைச்சு, கி.மா**


11.45% ஆகவும், இதனால் தேசிய ரீதியாக மூதூர் வலயம் 71வது இடத்திலும் 2020 புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலதிகமாக புள்ளிகளைப் பெற்று மாணவர்கள் சித்தியடைந்த வீதம் 10.36% ஆகவும் இதனால் 2020 இல் தேசிய ரீதியாக 79 இடத்திலும் காணப்படுகின்றது. இந்த திடிவ பின்னடைவிற்கு கொரோனா காரணமாக இருக்கலாம். எனினும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலதிகமாக புள்ளிகளைப் பெற்று மாணவர்கள் சித்தியடைந்த வீதத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய பொறுப்பு எமது கல்விச் சமூகத்தின் மீது திணிக்கப்படுகின்றது.

அதேபோல் க.பொ.த.(சா/த) பரீட்சை 2019 இன் பெறுபேறுகளை நோக்கும்போது, மூதூர் வலயத்தில் 1,216 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியதில் 788 மாணவர்கள் அதாவது64.87% சித்தியடைந்துள்ளனர் (உயர்தரம் படிப்பதற்கு தகுதி பெற்றோர்). இப்பெறுபேறுகளின் அடிப்படையில் மூதூர் வலயம் தேசிய ரீதியில் 88வது இடத்தில் காணப்படுவதோடு கிழக்கு மாகாண சித்தி வீதத்தின்படி இம் மாகாணம் 7ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

2019 இல் க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கும்போது 503 மாணவர்கள் தோற்றியதில் 368 மாண வர்கள் சித்தியடைந்ததுடன் இது 73.16% யும் காட்டி நிற்கின்றது. இதன்படி மூதூர் வலயம் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுக் காணப்படுகின்றது. கடந்த கால பெறுபேறுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதிக பெறுபேறுகளை மூதூர் வலயம் பெற்றுக் கொண்டுள்ளமை அவதானிக்க முடிகின்றது.

க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளில் மூதூர் வலயம், மாகாணத்தில் முதலிடத்தில் நிற்பதற்கான பல்வேறு அர்ப்பணிப்புக்களை பாராட்டுகின்ற அதேநேரம் உயர்தரம் கற்பதற்கான திருகோணமலை நோக்கிய படையெடுப்பு பாரிய பங்கு வகிக்கின்றது என்றும் கூற வேண்டிய தேவையுள்ளது. அதில் மாணவர்களின் திறனும் அவர்களதும் அவர்களின் ஆசிரியர்களதும் மற்றும் பெற்றோர்களினதும் அர்ப்பணிப்பும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதொன்றாகவே காணப்படுகின்றது.

2010ம் ஆண்டு திருகோணமலை மூதூர் வழியான A15 மட்டக்களப்பு வீதியும் அதனுடன் சேர்த்து 4 பாலங்களும் அமைக்கப்பட்டு, போக்குவரத்து சீர்செய்த காலப்பகுதியிலிருந்து கல்விக்காக திருகோணமலை நோக்கிய படையெடுப்பு கிண்ணியா, மூதூர் பிரதேசத்திலிருந்து கணிசமாக இருந்த போதிலும் தற்போது கிண்ணியாவிலிருந்து வருபவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

க.பொ.த.(சா/தர) த்தின் கடைசிப் பாடம் முடிந்த நிலையிலும் பெறுபேறுகள் வந்த அடுத்த நாளும் திருகோணமலை நகரில் திருவிழாவிற்கு வந்த பக்தர்கள் கூட்டம்போல் மூதூர் மாணவர்கள் நிறைந்திருப்பதை அவதானிக்கலாம்.

**தொடரும்....**



# சகவாழ்வு

## இஸ்லாமிய நோக்கு



**Ash.sheikh AWM. Basir (Naleemi), M.A (IUA)**
Lecturer - Fathih Institute for Higher Education
Thihariya.

பல்லின சமூகங்கள் வாழும் ஒரு தேசத்தில் நாம் வாழ்கிறோம். இங்கு வாழும் சமூகங்களுக்கு ஆயிரம் வருடங்கள் தாண்டிய வரலாறு உண்டு. ஆனால் கடந்த காலங்களில் இவ்வினங்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்கான பல முயற்சிகள் இடம்பெற்று வருவதை கண்டுவருகிறோம். இதன் விளைவாக, ஒவ்வொரு சமூகமும் அடுத்த சமூகத்தைப் பார்த்து சந்தேகம் கொள்ளும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால் நாடு மிக மோசமாக பின்னடையும் என்பதில் சந்தேகமில்லை.

இஸ்லாம் மனிதர்களை ஒரு தாயின் பிள்ளைகளாகவே கணிக்கிறது. ஒரு தாயின் கீழ் எப்படி ஒரு குடும்பம் ஒற்றுமையுடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் செயற்படுகிறதோ அப்படித்தான் முழு மனித சமூகமும் செயற்பட வேண்டும் என அது கருதுகிறது. நிற, இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒற்றுமைப்படும் புள்ளியை இஸ்லாம் பல இடங்களில் தெளிவாக சொல்லியிருக்கிறது.

மனிதர்களே உங்களை நாம் ஒரே ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் பரஸ்பரம் அறிமுகமாகிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே உங்களை கோத்திரங்களாகவும் மக்கள் திரளாகவும் ஆக்கினோம் – அல்-ஹு ஜு ராத் -13

மனிதர்களுக்கு மத்தியில் காணப்படும் வித்தியாசங்கள் முரண்பாடுகளை வளர்க்கவோ, அடுத்தவர்களை புறக்கணிக்கவோ, பிரிவினைகளை ஏற்படுத்தி செயற்படுவதற்கோ அல்ல என்பது இங்கு தெளிவு.

ஒரு சமூகத்தில் பல சமயங்களை பின்பற்றுபவர்கள் வாழ்வதை இஸ்லாம் ஒருபோதுமே மறுக்கவில்லை. ஒருவன் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றுவதற்குரிய உரிமையை ஒவ்வொருவருக்கும் அது வழங்கியிருக்கிறது. அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை - பகறா 256

அடுத்த சமூகங்களுடனான உறவில், இறைதூதர் அவர்கள் தனது பள்ளிவாயலைக் கூட அந்நிய சமயத்தவர்கள் தங்குவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள்.

நஜ்ரான் பிரதேசத்து கிருஸ்தவ தூதுக்குழுவினர் வந்த போது இறைதூதர் (ஸல்) அவர்கள் அந்த தூதுக்குழுவினரை புனித மஸ்ஜிதுந் நபவியில் தங்கச் செய்தார்கள். அங்கு ஈஸ்டர் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்கும் அவர்களுக்கு அனுமதி அளித்தார்கள். (புதூஹு ல் புல்தான்- 1, 78

அதுபோலவே, நீதி செலுத்தும் போது எதிரிகள்-நண்பர்கள் என வேறுபாடு பாக்காது அது நிலைநாட்டப்பட வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்தவொரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியை நிலைநாட்டுங்கள்” மாயிதா-8

உலகம் சமாதானமாக இருக்க வேண்டுமானால் அங்கு வாழுகின்ற அனைவரும் பரஸ்பரம் ஒத்துழைப்புடனும் நற்புறவுடனும் வாழும்போதே அது சாத்தியமாகும். அந்த வகையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் இஸ்லாத்தில் தாராளமாய் நிறைந்துள்ளன. ஒரு முஸ்லிம் அடுத்தவர்களை சந்திக்கும்போது உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்” என்று கூறுமாறு இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. சாந்தியும் சமாதானமுமே உலகிலுள்ள அனைவரினதும் தேட்டமாக உள்ளது.

மேலே சொன்ன விடயங்களை வைத்துப் பார்க்கும் போது எல்லா சமூகங்களுடனும் புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் பரஸ்பர ஒத்துழைத்து வாழ்வது மிக அவசியமானது என்பதை புரிந்து கொள்ளலாம். பல்லின தேசத்தில் வாழும் நாம் இவற்றைப் புரிந்து எல்லோருடனும் சகவாழ்வை முன்னெடுப்போமானால் இந்நாட்டில் சமாதானத்தையும் சபீட்சத்தையும் காண முடியும் என நம்பலாம்.

# மூதூர் 64ஆம் கட்டை காணி...

## ஜபல் நகர் சமூகம் சார்பில்


சட்டத்தரணி
எம்.எல். பைஸர்



*மூதூர் 64ஆம் கட்டை காணி மாத்திரமே தொலைந்து போனால் போகட்டும் என்று இருந்து விடாதீர்கள் !*

எங்கள் ஊரும் ஒரு நாள் ஊளையிட்டு அழும் நாள் வரமுன் பாரிய மக்கள் சக்தியினால் இதை தடுக்க முயற்சிப் போம். மூதூர் பிரதேச சபை இதற்கு முழு அதிகாரம் மிக்க அமைப்பு? தங்கள் அதிகார எல்லைக்குள் பாரிய ஆக்கிமிப்புக்கான முயற்சி நடைபெறுவதை கண்டும் காணாதது போல் இருந்து கொண்டிருப்பதை காண முடிகிறது. 88 ஏக்கர் மலைப் பகுதியை உள்ளடக்கி நில அளவை செய்ய மூதூர் பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூதூர் மக்களின் பொருளாதார தள மான மூனாங்கட்டை மலையினை மூதூர் பிரதேச செயலாளர் முன் யோசனை இன்றி நில அளவை செய்ய வேண்டுகோள் விடுத்துள்ளமை அவர் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகின்றது.



இதில் சேமன் மற்றும் இன்னும் ஒரு உறுப்பினரின் பங்களிப்பு தவிர அனைவரும் தூங்கிக் கொண்டிருப்பதை இட்டு பகிரங் கமாக கண்டனம் தெரிவிக்கின் றோம். 88 ஏக்கர் மலைப் பகுதி யும், 60 ஏக்கர் நிலப்பரப்பும் ஒரு தனி மதகுருவின் கோரிக்கைப் படி உத்தேச அளவீடு செய்யப் பட்டுள்ளது. இதனை பல கோணங்களில் நாங்கள் எதிர்த்து வருகின்றோம். பொறுப்புக்கூற வேண்டிய அமைப்புகள் களத்தில் குதிக்குமா?

எம்மோடு தோல் கொடுத்து கொண்டிருக்கும் சகோத ரர்களின் இறுதி மூச்சி வரை நாம் எமது நிலத்தை மீட்டு எடுக்க முயற்சிப்போம்.

**எமது காணியினை எடுத்து பூஜா அளிப்புக்காக வழங்க மூதூர் பிரதேச செயலாளர் எடுக்கும் முயற்சி நியாயமானதா....?**

# மூதூர் வரலாறு தொடர் - IV

## இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 1947 இல் மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர்



எம்.எஸ்.எம். பிஸ்ரி
BBA, PGDE



## சிலோன் ஷேக்ஸ்பியர் ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர்

அந்நியர் ஆட்சியின் கீழ் சுமார் 443 வருடங்கள் (1505 - 1948) ஆட்சி செய்யப்பட்டு வந்த இலங்கைத் தாய்த்திருநாடு 1948.02.04ம் திகதி சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் பெற்றதன் பின்னர் நமது நாட்டை ஆளுவதற்காக முதலாவது பாராளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23, 25, 26, 27, 28, 30 ஆம் திகதிகளில் செப்டம்பர் மாதம் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20 ஆம் திகதிகளிலும் மொத்தமாக இலங்கை முழுவதும் தொகுதிவாரியாக 19 நாட்கள் நடைபெற்றன. தேர்தல் காலங்களில் வெள்ளிக் கிழமைகளில் முஸ்லிம்கள் ஜூம்ஆ தொழுகைக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக வாக்களிப்பு நடைபெறவில்லை. ஆகஸ்ட் 27ம் திகதியே மூதூர் தொகுதிக்கான வாக்களிப்பு நடைபெற்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1924ம் ஆண்டு இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவரும் தங்களுக்குரிய சட்டசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக இலங்கை முழுவதும் ஒரு தொகுதியாக வரையறுக்கப்பட்டு அதற்கு "முகம்மதியன் தொகுதி" எனப் பெயரிட்டனர்.

1931 தேர்தலின் போது கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு தெற்கு தொகுதி, மட்டக்களப்பு வடக்கு தொகுதி எனப் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் தற்போது மூதூர் தொகுதியானது மட்டக்களப்பு வடக்கு தேர்தல் தொகுதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. 1931.07.07ஆந் திகதி நடைபெற்ற தேர்தலில் மட்டக்களப்பு வடக்கு தேர்தல் தொகுதியில் திரு : வீ. நல்லையா தெரிவு செய்யப்பட்டார். இதுபோல் 1936 ஆண்டு தேர்தலின் போதும் மூதூர் தொகுதி மட்டக்களப்பு வடக்கு தொகுதியுடனேயே இணைக்கப்பட்டிருந்தது.

1947ம் ஆண்டு இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயத்தின் போது திருகோணமலை மாவட்டம் திருகோணமலைத் தொகுதி, மூதூர் தொகுதி எனவும் வரையறுக்கப்பட்டது. அன்று மூதூர் தொகுதியானது தற்போதய மூதூர் தொகுதி, சேருவிலத் தொகுதி ஆகிய இரு தொகுதிகளின் நிலப் பரப்பினைக் கொண்ட ஒரு தொகுதியாக "மூதூர் தொகுதி" எனும் பெயரையும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யும் தொகுதியாகவும் காணப்பட்டது. (1960.03.19ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டது.)

மூதூர் எனும் பெயர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு பிரசித்தி பெற்ற பெயராகும். மூதூர் ஒரு முதுமையான ஊர் என்பதனால்தான் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் "மூதூர் தொகுதி" என்ற நாமம் பிரயோகிக்கப்பட்டுள்ளது எனவும் அனுமானிக்கலாம்.

முதலாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதி வேட்பாளர்கள்.

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மூதூர் தொகுதி சார்பாக 4 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில்

**ஜனாப். ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர் (ஐ.தே.க) - 3480 வாக்குகள்**

**ஜனாப். எம்.ஈ.எச். முகம்மது அலி (சுயேட்சைக்குழு) - 1760 வாக்குகள்**

**திரு. ஈ. சொக்கலிங்கம் (அ.இ.த.கா) - 1555 வாக்குகள்**

**திரு. ஏ.சி. செல்வராசா (இ.க.க) - 1118 வாக்குகள்**

- **செல்லுபடியான வாக்குகள் - 7913 வாக்குகள்**
- **நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - 228 வாக்குகள்**
- **மொத்த வாக்குகள் - 8141 வாக்குகள்**

*ஆதாரம் : லெவல மரைக்கார் சின்ன மரைக்கார் ஆசிரியரின் குறிப்பேட்டிலிருந்து – மூதூர் குளத்தடி தெரு ஜாயா வீதி*

இந்தத் தேர்தலில் கிண்ணியாவைச் சேர்ந்த ஜனாப் : ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்டு 3480 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதன் மூலம் மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

ஏனைய வேட்பாளர்களான ஜனாப் : எம்.ஈ.எச். முகம்மது அலி கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யூனானி வைத்தியரான இவர் சுயேட்சையாக போட்டியிட்டார்.

மற்றும் திருகோணமலையைச் சேர்ந்தவர்களான சட்ட வல்லுனர் திரு : ஈ. சொக்கலிங்கம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாகவும், சட்ட வல்லுனர் திரு : ஏ.சி. செல்வராசா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் மூதூர் தொகுதியில் போட்டியிட்டனர்.



சிலோன் ஷேக்ஸ்பியர் என அழைக்கப்பட்ட மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர்.

இவர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர். ஆங்கிலத்தில் பேசுவதிலும், ஆங்கில இலக்கியத்திலும் தேர்ச்சி பெற்றவர். இலங்கைப் பாராளுமன்றத்தில் தனது உரையின் போது ஆங்கில மொழியில் கவிபாடியே மக்களின் தேவைகளை முன் வைப்பார். இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களால் **"சிலோன் ஷேக்ஸ்பியர்"** என அழைக்கப்பட்டார். (*ஆதாரம் : ஏ.எச்.எம். அஸ்வர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் : நடந்த பாதங்கள் கோடி பெறும் – தொடர் கட்டுரை : தினகரன் வார மஞ்சரி – 2009*)

ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர் (பா.உ) இன் சேவைகள் இவரின் பதவிக் காலத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்றன. அவற்றில் மூதூர் பிரதேசத்துடன் தொடர்புபட்ட குறிப்பிட்ட சில சேவைகளை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

திருமலை மாவட்டத்தில் புதிய பாடசாலைகள் நிறுவுவதை நோக்காகக் கொண்டு கல்வித் திணைக்களக் குழு செயற்பட்டது. ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர், எம். முகைதீன் ஆகியோரும் இக்குழுவில் முக்கிய அங்கம் வகித்தனர். இக்குழுவின் முயற்சியினால் பின்வரும் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

- தி/மூ/இலக்கந்தை தமிழ்மொழிப் பாடசாலை
- தி/மூ/பாலைத்தோப்பூர் தமிழ்மொழிப் பாடசாலை
- தி/மூ/ஈச்சிலம்பற்று தமிழ்மொழிப் பாடசாலை
- தி/மூ/அக்கரைச்சேனை தமிழ் மொழிப்பாடசாலை

1950 - 1951 ல் திருகோணமலை வரவு செலவுத் திட்டக் கூட்டத்தில் தி/மூ/ மூதூர் ஜூனியர் பாடசாலை (ஆ.ஊ.ஊ), தி/மூ/ தோப்பூர் ஆண்கள் தமிழ் மொழிப் பாடசாலை (தி/மூ/ அல்-ஹம்றா மத்திய கல்லூரி) என்பவற்றுக்கு ஆசிரியர் விடுதிகள் கொடுக்கப்பட்டன.

இவரின் காலப்பகுதியில் சீனன்குடா விமான நிலையம் அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழாவுக்கு வருகை தந்த இலங்கையின் முதலாவது பிரதமர் தேசபிதா கௌரவ : D.S. சேனநாயக்க அவர்களினால் இவரின் சேவைக்காகவும், இவரின் நன்மதிப்பிற்காகவும் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**"இவரின் அரசியல் வரலாறு, சேவைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய நினைவு மலர் ஒன்றை கிண்ணியாவில் வாழும் அவரின் குடும்பத்தினர் வெளியிட்டுள்ளனர்."**





அஷ்ஃபா அஷ்ரஃப் அலி

வற்றா நதியென வளமளித்து
வாழும் உயிர்கட் குணவளிக்கும்
ஏற்றங் கொண்ட யிறையோனை
என்றும் துதிப்போர் இங்கில்லை !

போற்றா திருப்போர் ஒருபாதி
பொல்லா துள்ளம் மறுபாதி
ஏற்றத் தாழ்வு என்றி ன்றி
ஏந்திடும் அவனை நினைப்பதில்லை !

ஆற்றாத் துயரம் சூழ்கையிலே
ஆயிர மாயிரம் அவ (ன் ) னினைவு
ஆற்றலில் அவனின் வல்லமையை
ஆழ்ந்தே நோக்கிடக் கண்களில்லை !

வேற்றுமை யகற்றி உயிர்கட்கு
வேண்டுவ தெல்லாம் அளிப்பவனே
ஆற்றல் கொண்ட உன்னன்பால்
அளக்கும் படியிலும் குறைவில்லை !

காற்றால் மழையால் கதிரொளியால்
காலச் சுழற்சியில் எமைகாக்கும்
ஏற்றம் பெற்ற உனையன்றி
ஏகன் வேறு எமக்கில்லை !!



## Direction Board & Name Board கையளிப்பு

தி/மூதூர் சதாம் வித்தியாலையத்தின் பழைய மாணவர்கள் சங்கமாகிய **சதாமியன்** மூலம் பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக ரீதியான அபிவிருத்தியில் பாரிய பங்கினை கடந்த வருட முதல் செய்து வருகின்றது. அந்த வகையில் பாடசாலைக்கு நீண்ட கால தேவையாக இருந்த வகுப்பறைகளை அடையாளப்படுத்தும் (Direction Board) மற்றும் பெயர் பலகை என்பன பாடசாலையின் அதிபர் அவர்களின் கோரிக்கையின் பேரில் 15.03.2021ம் திகதி பாடசாலையின் அதிபர் சுஹூத் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்குபற்றுதலுடன் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் பொறுமதி சுமார் ஷரூபாய். 31500.00 ஆகும். இதற்கான உதவிய இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். ஜஷாக்குமுல்லாஹ் ஹைறன்



Skylab Mahroof

## Dr. சுக்றி ஐயா!

கிண்ணியாவில் பிறந்து ரஸ்யாவில் வைத்தியர் பட்டம் பெற்று மூதூரில் திருமணம் முடித்தவர் மூதூர் தள வைத்திய சாலையில் னுஆழு வாக கடமையேற்ற காலம் மிக பயங்கரவாதிகளின் போராட்டம் நிறைந்த காலம், வைத்தியர்களின் பற்றாக்குறைக்கு மத்தியிலும் இம் மக்களுக்கான வைத்திய சேவையை திறம்பட செய்து மக்களின் பாராட்டையும் பெற்றவர்.

நகைச்சுவை கலந்த மருத்துவம் எப்போதுமே நோயாளிகளை தேற்றும் அதுவே இப்போது உலகில் பிரபலமடையும் மருத்துவமும் கூட.

*"நோயாளி ஒருவர் ஐயாவிடம் வந்து டாக்டர் எனக்கு கண் பார்வை கொஞ்சம் மங்களாக இருக்கிறது,புள்ளியாக தெரிகிறது என்றதும் ஐயா உடனே அன்டனாவ திரும்பிப் பாத்தீங்களா என்றதும் வந்தவர் உடனே சிரித்த வரலாறும் உண்டு.*

பின்பு பல வருடங்களாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையேற்று சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பெண்கள், கர்ப்பிணித்தாய்மார்களின் சேம நலன்களில் அதிகம் அக்கறை கொண்டவர்

தனியார் பிரத்தியோக வைத்திய சேவையை வருமாணம் ஈட்டும் சேவையாக பாராது மக்கள் சேவையாகவும், அதிகமானோருக்கு தர்மமாகவும் செய்தவர் அதற்கு வர்த்தகர்ளாகிய நாங்களே சாட்சி தொழில் நிமிர்த்தம் பல நாடுகளுக்கு சென்ற ஐயா அண்மையில் குடும்ப சகிதம் டென்மார்க் நாட்டிற்குச் சென்று மீண்டும் இங்கு வந்து கடமையேற்று வைத்துய பணி செய்தவர்.




கடந்த 12/3/2021ஆம் திகதி வைத்திய பணி செய்வதற்காகவும் வதிவிடத்தினை உருதி செய்வதற்காகவும் குடும்ப சகிதம் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்கள் அவர் களது எண்ணம் போல் வாழ்வு அமைய இறைவனை பிரார்த்திப்பது நாம் அனைவரினதும் கடமையும் பொருப்பும் உங்களது மேலான துவாக்களில் சேர்த்துக் கொள்ளுமாறு தயவாக வேண்டுகிறேன்.




## வருடாந்த சிறுவர் சந்தை அல்-அக்ஸா பாலர் பாடசாலை

கடந்த சனிக்கிழமை 10 மூதூர் தக்வாநகர் அல்-அக்ஸா பலர் பாடசாலையின் சிறுவர் சந்தை அல்-ஹிலால் மத்திய கல்லூரி மைதான வீதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் மாகாண சபை உறிப்பினர் ஜே.எம். லாஹிர், ஈராக் விளையாட்டு கழக தலைவர் என். எம்.அப்துல், செயலாளர் ஏ.எம்.நியாஸ் மற்றும் பலர் பாடசாலை தலைவர் வி.கஸ்ஸாலி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




## விதை நெல் சுத்திகரிப்பு

மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாணியமுறை அடிப்படையிலான விதை நெல்சுத்திகரிப்பு செய்து கொடுக்கப்படும். மூதூர், சேருவில, ஈச்சலம்பற்று பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் இச்சலுகைகளை அனுபவிக்க முடியும்.


**முகநூல் முற்றத்துவெளியில் உங்கள் Facebook ஆக்கங்களும் இடம்பெற விரும்புகின்றீர்களா...?**

**#Muththithal #mmv/fb**

**என்று #(Hastag) செய்யவும்.**



**மேலதிகத் தொடர்புகளுக்கு :**
Muththithal **முத்திதழ்**
**என்ற** fb Page
**ஐ நாடவும்**

facebook

## சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டமும், பரிசளிப்பு நிகழ்வும்



கடந்த 2021.04.07(புதன்) எமது மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.பி.எம் முபாறக் அவர்களின் தலைமையில் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டமும் சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் சிறப்பாக நடந்தேறியது.

இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தினுடைய பதவி நிலை உத்தியோகத்தர்கள், மூதூர் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. இஸட்.எம்.எம்.நளீம், மூதூர் பிரதேச சபை செயலாளர் வி. சத்தியசோதி, றெக்டோ நிறுவன பணிப்பாளர் ஜே.எம்.அஷார், மூதூர் தள வைத்தியசாலையினுடைய நிர்வாக உத்தியோகத்தர், இலங்கை வங்கி - மூதூர் முகாமையாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோ கத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், நினைவுச்சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்களுக்கான வீதி ஒழுங்குமுறை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்



கடந்த (04) ஞாயிறு காலை 10:30 மணியளவில் Professional Development Center For Teachers அரச கட்டடத் தொகுதியில் ஜே.எம்.இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற வாகன வீதி ஒழுங்கு முறை பற்றிய கருத்தரங்கு போக்குவரத்து உதவிப் பொலிஸ் பரிசோதகர் பிடிதெனிய மற்றும் பொலிஸ் வாகன போக்குவரத்து பொலிஸ் கொஸ்தாபல் அபூகனீபா முஹம்மது, முஸம்மில், தலைமையில் அதிபர், ஆசிரியர்களுக்கு நடைபெற்றது.

இன்றைய காலகட்டத்தில் வாகனப்போக்குவரத்து வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமைக்குக் காரணம் நாம் இமைக்கும் நேரத்தில் விடும் தவறாகும்.

வாகனத்தில் பயணிக்கும் போது நாம் பலவகையான சிந்தனைகளோடுதான் பயணிக்க வேண்டிய கால கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம். கணனி மயமான இவ்வுலகில் நாம் கணனி மயமாகத்தான் சிந்திக்க வேண்டும்.

**செய்தி - மூதூர் போட்டோ நியூஸ்**

## சேவை நலன் பாராட்டு



கடந்த காலங்களில் முத்தமிழில் கோலோச்சிய சம்பூரின் கலைப்பண் பாட்டுத்தொடர்ச்சியைப்பேணும் முகமாக எமது சம்பூர் தமிழ்க் கலாமன்றத்தினால் வருடா வருடம் சிறப்புற நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் விழாவின் நான்காவது ஆண்டினை நினைவு கூறும் முகமாக சம்பூரில் நிறுவப்பட்ட உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலையானது கடந்த 2021.03.28 ஆம் திகதி வணக்கத்திற்குரிய சுவாமி தக்ஸ் மஜானந்தர் அவர்களின் திருக்கரங்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து சம்பூர் பண்பாட்டு மண்டபத்தில் சுவாமி விபுலானந்தரின் 129 ஆவது அகவை தின நிகழ்வுகள் இடம் பெற்றதோடு விபுலம் எனும் சிறப்பு இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனை ஒட்டி நடைபெற்ற கவிதைப் போட்டியில் விபுலக்கவி, விபுலமணி விருதுகளை பெற்றுக்கொண்டோருக்கான விருதுகளும் பரிசில்களும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன

இதன்போது சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலையினை மிக நேர்த்தியான மிடுக்கோடு உருவாக்கித்தந்த சிற்பி சம்பூர் காண்டீபன் அவர்களும் எமது மன்றத்தினால் நன்றியோடு கௌரவிக்கப்பட்டார்.

## முத்திதழ் செய்திகள்

## வீட்டு இலக்கம் இடல்



மூதூர் பிரதேசத்தை பொறுத்தவரையில் முகவரி இடுகின்றபோது வீட்டு இலக்கம் இடம்தான் நாம் வரலாற்று ரீதியாக முகவரிகளை கொடுத்து வருகின்றோம் இதனால் கடிதம் கொண்டு வரும் தபால்காரரர் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதுடன் சிலரது கடிதங்கள் மீள அனுப்பப்படுவதும் வழமை இதனை உணர்த்த அக்கரைச்சேனை கிராம அபிவிருத்திச் சங்கமானது இன்றைய தினம் அந்த கிராம அபிவிருத்தி எல்லைக்குள் காணப்படும் வீடுகளுக்கு வீட்டு இலக்கம் இடும் நடவடிக்கையை இதன் தலைவர் ரபீக் சர்ராஜ் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைத்தது இந்த நிகழ்வில் செயலாளர் T. முசத்தீக் மற்றும் பொருளாளர் R. ரம்சான் மற்றும் உப தலைவர் M.I. சவாகிர் மற்றும் உறுப்பினர்களான அரூஸ், நியாஸ், முகாரிஸ் போன்றவர்களோடு இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ரபீக் ஹூசைன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இது இனி வரும் காலங்களில் மூதூர் பிரதேசம் முழுமையாக செய்தால் எமதூருக்கு மிகவும் பிரயோசனமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு விழிப்புணர்வு செயலமர்வு



இன்று மூதூர் சுகாதார பணிமனையின் அனுசரணையோடும், மூதூர் Lions Club of Mutur United ஏற்பாட்டில் 80 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு விழிப்புணர்வு செயலமர்வு மற்றும் போசாக்கு முத்திரை விநியோக நிகழ்ச்சி சுகாதார வைத்திய அத்தியேட்சகர் Dr. Gazzali Noor அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் K.Nafarath (District Coordinator - Early Childhood) அவர்களினால் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்யப்பட்டடத்தோடு மக்கள் வங்கி அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

## நடுத்தீவு மக்களின் நீண்டநாள் குறையை நிவர்த்தி செய்த தவிசாளர்



மூதூர் நடுத்தீவு கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணப்படும் முதலாவது பாலத்தின் அவல நிலை குறித்து சென்ற நாட்களில் MP NEWS ஊடாக மூதூர் பிரதேச சபை தவிசாளரின் கவனத்திற்குகொண்டு செல்லப்பட்டதையடுத்து இன்று( 29) அதனை நிவர்த்தி செய்யும் முகமாக கௌரவ தவிசாளர் எம்.எம்.ஏ.அறூஸ் மற்றும் வட்டார உறுப்பினர் வஹ்ஜித் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு அமைவாக, நடுத்தீவுபாலம் நடுத்தீவு சனசமூக நிலையம், RDS உதவியோடு பாலம் சீரமைக்கப்பட்டுவருகின்றது.

பாலத்தின் குறைகளை காலதாமதமின்றி செய்து தந்தமைக்கு மூதூர் பிரதேச சபை தவிசாளருக்கு பொது மக்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## திரைப்பட வெளியீடு




மூதூர் நியூஸ் லைன் குழுவின் தயாரிப்பில் விழிப்புணர்வு குறுந்திரைப்படம் வெளியீடு!

I media network இனால் நடாத்தப்படும் குறுந்திரைப்படப் போட்டிக்காக மூதூர் நியூஸ்லைன் ஊடக குழுவின் தயாரிப்பில் மறுமலர்ச்சி - முதல்தொழுகை என்ற விழிப்புணர்வு குறுந்திரைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

300 வினாடிகளை கதை உள்ளீடாக கொண்ட இக்குறும்படம் சமூகத்திற்கு மார்க்கம் சார்ந்த ஒரு விழிப்புணர்வு செய்தியை கருவாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

# வைரவிழாவை நோக்கிய பயணத்தில்



**தொகுப்பு :**
அமீர் சிபான்
பிரதிச் செயலாளலர்
அல்-ஹிலால் பழைய மாணவர் சங்கம்

# ஹிலாலியன் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு

**1961** ஆம் ஆண்டு கேணிக்காட்டு அரசினர் பாடசாலையாக உருவாக்கப்பட்டு அது தற்போது அல்ஹிலால் பாடசாலை என்ற தனது பெயர் கொண்ட நாமத்திற்கு ஏற்றால்போல் 2021 ஆம் ஆண்டில் தனது 60 ஆண்டுகளை கடந்து வைரவிழா கொண்டாடும் நிலைக்கு தன்னை பரிணமித்துக்கொண்டது.

தனது தன்னகத்தே நிலைநாட்ட வளர்பிறை போன்று தொடர்ந்து வளர்ந்து இந்நிலையை எட்டியுள்ளது. மிகக் குறுகிய கால இடைவெளியில் எமது ஊரில் விரல்விட்டு எண்ணக்கூடிய முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றாக தன்னை நிலைநாட்டியது அல்-ஹிலால் மத்திய கல்லூரி முன்னேற்றத்தில் பாடசாலையில் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் சமூக ஆர்வலர்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

1962 தொடக்கம் 1963ஆம் ஆண்டு வரை அக்கரைச் சேனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை எனும் பெயருடன் இயங்கி வந்தது. பின்னர் 01.07.1967 தொடக்கம் 05.11.1971 வரையும் தி/அல்-ஹிலால் முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயருடன் இப்பிரதேச கல்வி அபிவிருத்தியில் தடம் பதித்தது என்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும்.

முன்னாள் கௌரவ பிரதியமைச்சர் ஏ.எல்.அப்துல் மஜீத் அவர்களால் 6.11.1976 ஆம் ஆண்டு இப்பாடசாலை அல்-ஹிலால் மகா வித்தியாலயம் என தரம் உயர்த்தப் பட்டதுடன் 1989 இல் க.பொ.த உயர்தர கலைப் பிரிவு வகுப்புகளுக்கான அடித்தளமும் இடப்பட்டது.

05.04.2000 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு அமைவாக பாடசாலைகள் தரம் பிரிக்கப்பட்டபோது அல்-ஹிலால் மகா வித்தியாலயம் சிரேஷ்ட பாடசாலையாகவும் (10-13) வரை வகுப்புக ளையுடைய அல்-ஹிலால் கனிஷ்ட பாடசாலையாகவும் (1-9) வரை பிரிக்கப்பட்டது.

கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலைகளாக சிறிதுகாலம் இயங்கிவந்த அல்-ஹிலால் அதன் அடுத்த கட்ட நகர்வுக்குத் தன்னை ஆயத்தமாக்கியது. அது ஆண், பெண் எனும் இரு கல்லூரிகளாக இப் பாடசாலைகள் திகழ வழிவகுத்தது. அது புதப் பரிணாமத்துடன் 02.01.2002 இல் இப்பாடசாலைகளில் தி/அல்-ஹிலால் ஆண்கள் மகா வித்தியாலயம் மற்றும் தி/அல்-ஹிலால் பெண்கள் மகாவித்தியாலயம் என இருவேறு பாட சாலைகளாக பிரிக்கப்பட்டு இயங்க ஆரம்பித்தன.

01.01.2009 ஆம் ஆண்டளவில் நவோதய படசாலையாக மாற்றியமைக்கப்பட்டு அதே காலப்பகுதியில் அல்-ஹிலால் மத்திய கல்லூரி தரமுயர்த்தப்பட்டதோடு எமது பாடசாலை உயர்தர கணித விஞ்ஞான பிரிவுகள் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டது. அக்காலப்பகுதியில் கலைப்பிரிவு, வர்த்தக பிரிவுகளுக்கான ஆசிரியர் ஆளணி வளங்களை மட்டுமே எமது ஊர் கொண்டிருந்தது. இருந்தபோதும் அக்காலத்தில் இருந்த பாடசாலை சமூகம் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் முயற்சியோடு உயர்தர கணித விஞ்ஞான பிரிவுக்கான ஆய்வுகூட வசதிகள், கட்டிட வசதிகள் மற்றும் பிரத்தியேக ஆசிரியர் வளங்கள் அறிமுகம் செய்யப்பட்டு மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஒழுங்கமைத்து கொடுக்கப்பட்டது. மாணவர்களின் பங்கு பற்றுதலோடு தொடர்ச்சியாக கணித விஞ்ஞான துறையை வளர்க்க கூடியதாகவிருந்தது.

2013 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு எமது ஊரில் எழுந்த உயர்தர விஞ்ஞான பிரிவுகளுக்கான ஆக்கபூர்வமான முனைவுகள் எமது பாடசாலையில் புதியதொரு அத்தியாயத்தை வரைய ஆரம் பித்தது. இதனால் 30 ற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் மாணவ, மாணவிகள் ஒவ்வொரு வருடமும் இணைந்து கற்ப தோடு பல்கலைக்கழக தேர்வுக்கும் எதிர்பார்த்த சதவீத அடை வுகள் கிடைக்க வழிவகுத்தது.

2018, 2019 காலப்பகுதியில் உயர்தர தொழிநுட்ப விஞ்ஞான பிரிவு மற்றும் 13 ஆண்டு உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வித் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் தற்போதுவரை இத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

அத்துடன் பாடசாலையின் அபிவிருத்திக்குப் பழைய மாண வர் சங்க நிர்வாகங்கள் கலத்திற்குக் காலம் செயற்பட்டு நல்ல பல சேவைகளை ஆற்றிவந்துள்ளன.

2019 ஆம் ஆண்டு தேர்வுசெய்யப்பட்ட பழைய மாணவர் சங்கத்தின் அதீத வினைத்திறன்மிக்க செயற்பாடுகள் காரணமாக பல்வேறு வேலைத் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டபோதும் குறிப்பாக தேசிய பாடசாலையாக தரமுயர்த்தல் தொடர்பில் பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டம் உண்மையில் பாராட்டத்தக்கது. இருந்தபோதும் இந்த முன்னெடுப்பு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகிய நிலையிலும் இதுவரை அரசியல், நிர்வாக ரீதியில் உள்ள தடங்கல் மூலமாக வெற்றியளிக்க தொடர்ந்தும் செயற்படுகின்றமை குறிப்பிடவேண்டும்.

விசேடமாக இப்பாடசாலைகளில் அபிவிருத்தியில் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழு அங்கத்தவர்களின் ஒத்துழைப்போடும் ஜே.எம்.ஹுசைதீன் (SLPS), எம்.சீ.எம்.ஷெரீப் (SLAS) ஆகியோரின் பங்களிப்பு பல துரித உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு மூலகரமாக அமைந்துள்ளதை இவ்விடத்தில் கூறியாகவேண்டும்.


ஏனெனில் உயர்பதவிகளில் பணியாற்றிய காலத்தில் எமது பாடசாலைக்கான ஆளணி வளம் மற்றும் உட்கட்டமைப்பு சார்ந்த பல நிர்மாணங்கள் இவர்களின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டது.

எமது தாய்ப்பாடசாலையின் 60 ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக ஹிலாலியன் OBA நிறுவகத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவர் தொகுதிகளை ஒன்றிணைத்து அவர்களை கொண்டு பல உள்ளக வேலைத் திட்டங்கள் முன் னெடுப்பு செய்யப்பட்டன. மேலும் பழைய மாண வர்களை ஒன்றினைத்து பாடசாலையின் நலன்சார் வேளைகளில் பங்குகொள்ளும் திறந்த வாய்ப்பு வசதிகளை உண்டாக்கி தற்போது பல தொகுதி பழைய மாணவர்கள் பாடசாலை நலனில் கவனம் செலுத்தும் அளவிற்கான விழிப்புணர்வை உண்டாக்கியுள்ள பெருமை தற்போதைய பழைய மாணவர் சங்க நிருவாகத்தை சாறும்.

வைரவிழாவை முன்னிட்டு பாடசாலையில் வைரவிழா மலர், விளையாட்டுப்போட்டி, பழைய மாணவர் ஒன்றிணைவு சமையல் ஏற்பாடு என்பன எதிர்காலத் திட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இணைப்பாடவிதான செயற்பாடுகள் தேசிய மட்ட சாதனைகள்

| இல | பெயர் | வருடம் | தரம் | விடயம் |
|---|---|---|---|---|
| 1 | முஹம்மது சக்ரி | 2011 | 12 | மீளத்துன் நபி விழா – கட்டுரை |
| 2 | கபூர் புரைதா | 2012 | 11 | மீளத்துன் நபி விழா – ஆங்கில பேச்சு |
| 3 | நளீம் சியாம் | 2015 | 12 | சமூக விஞ்ஞானப் போட்டி |
| 4 | சமீம் சல்மான் | 2017 | 11 | புத்தாக்க கண்டுபிடிப்பு |
| 5 | உபைதுல்லா சக்கீத் | 2019 | 12 | சித்திரப் போட்டி – கண்டால் தாவர பாதுகாப்பு<br>சித்திர ஆக்க கட்டுரை அளவை நிறுவை திணைக்களம் |
| 6 | முஹம்மது நிப்ராஸ் | 2016 | 12 | 400 m ஓட்டம்<br>800 m ஓட்டம் |
| 7 | முஹம்மது அப்ராஸ் | 2019 | 12 | மீளத்துன் நபி விழா – ஆங்கில பேச்சு |
| 8 | அனஸ் சிமார் | 2019 | 12 | சிறுகதை ஆக்கம் |
| 9 | அஹமட் அக்தார் | 2019 | 10 | மீளத்துன் நபி விழா – ஆங்கில பேச்சு |
| 10 | 16 வயதிற்கு உட்பட்ட பிரிவு | 2019 | - | உதைப்பந்தாட்டம் |
| 11 | முஸ்தபா முஸாதிக் | 2019 | 12 | 5000 m ஓட்டம்<br>1500 m ஓட்டம் |
| 12 | முஹ்சீன் முபாத் | 2019 | 13 | 100 m ஓட்டம்<br>200 m ஓட்டம்<br>4 x 100 அஞ்சல் ஓட்டம்<br>110 m தடை தாண்டல் ஓட்டம் |
| 13 | ஜுனைட் இனாமுல் ஹசன் | 2019 | 13 | நீளம் பாய்தல்<br>200m ஓட்டம்<br>4 x 100 அஞ்சல் ஓட்டம் |
| 14 | 14 வயதிற்கு உட்பட்ட பிரிவு | 2019 | - | 4 x 100 அஞ்சல் ஓட்டம் |
| 15 | 20 வயதிற்கு உட்பட்ட பிரிவு | 2019 | - | 4 x 100 அஞ்சல் ஓட்டம் |






## அல்–ஹிலால் மத்திய கல்லூரியில் இதுவரை கடமையாற்றிய அதிபர்களின் விபரம்

| இல | அதிபர் பெயர் | காலப்பகுதி |
|---|---|---|
| 1 | அல்ஹாஜ் கே.எம்.சுபைர் | 02.01.1961-05.09.1962 |
| 2 | மர்ஹூம் ஏ.எம்.எம்.முஸ்தபா | 06.09.1962-31.12.1962 |
| 3 | மர்ஹூம் வீ.எம்.ஏ. லத்தீப் | 01.01.1963-15.12.1963 |
| 4 | மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.சி.கே. முஹம்மது | 16.12.1963-17.02.1964 |
| 5 | மர்ஹூம் எஸ்.எம்.அபூபக்கர் | 18.02.1964-31.12.1970 |
| 6 | மர்ஹூம் என்.எம்.சிராஜிதீன் | 01.01.1971-01.02.1971 |
| 7 | மர்ஹூம் எஸ்.எம்.சாகுல் ஹமிது | 02.02.1971-20.10.1971 |
| 8 | மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.சி.கே.முஹம்மது | 21.10.1971-31.01.1975 |
| 9 | மர்ஹூம் ஏ.எம்.புகாரி | 01.02.1975-28.02.1978 |
| 10 | ஜனாப் ஏ.சி.எம்.மக்கீன் | 01.03.1978-01.01.1990 |
| 11 | மர்ஹூம் எம்.எஸ்.எம்.ஜுனைட் | 03.01.1990-26.11.1992 |
| 12 | ஜனாப் ஏ.எம்.புகாரி | 27.11.1992-04.01.1993 |
| 13 | அல்ஹாஜ் எம்.எம்.எம்.இஷ்ஹாக் | 05.01.1993-07.07.1997 |
| 14 | மர்ஹூம் அல்ஹாஜ் கே.எம்.சித்திக் முஹம்மது | 08.07.1997-10.03.1999 |
| 15 | அல்ஹாஜ் யூ.என்.ஏ.அப்துல் கபூர் | 10.03.1999-10.012014 |
| 16 | ஜனாப் ஹனீபா முஹம்மது ரியால் | 11.01.2014-29.01.2014 |
| 17 | ஜனாப் எஸ்.ஏ.முஹீர் | 30.01.2014-18.09.2014 |
| 18 | ஜனாப் அல்ஹாஜ் வி.எம்.நஹீப் | 19.09.2014-15.01.2015 |
| 19 | ஜனாப் எம்.எல்.எம்.முபாரக் | 23.04.2015-19.08.2020 |
| 20 | ஜனாப் கே.றசீம் | 20.08.2019-up to now |

SCHOOL DETAILS

School Details
Name of School - T/Mu/Al-Hilal Central College
Address - New Jetty Road Mutur -01
Type of School - 1AB
Telephone / Fax - 0262238432
Website - www.macc.sch.lk
OBA Website - www.hilalianoba.com
Sachool was Started on - 03.09.1961
School Id - 16172
Grama Niladhari - Akkarchehanai
Divisional Secretariat - Mutur

# ஹிலாலியன் பழைய மாணவர் சங்கம் - 2021



**K.RASEEM** President | **MMM. SIYAN** Secretary | **AMEER SHIFAN** Deputy Secretary | **S. ANAS** Treasurer | **SIM. MUHAJIR** Deputy Treasurer | **P. ARAFATH** Member | **FM. ANEES** Member | **MS.GAZZALY** Member



**R.SARRAJ** Member | **HM.AZAM** Member | **MM. AMEEN** Member | **JM.IHSHAN** Member | **AM.NIYAS** Member | **CBA. BASITH** Member | **MA.RAMSATH** Member



## ஹிலாலியன் பழைய மாணவர் சங்கத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்.

- 17 September /2018 - MCC'ian Blast வாகன ஊர்வலத்தை கௌரவிக்கும் முகமாக எமது OBA ஏற்பாட்டில் நினைவு சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.
- 10/ October /2018 - ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சுமார் 50,000 ரூபாய் பெறுமதியான பரிசில் பொருட்கள் ஆசிரியர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதோடு ஆசிரியர்தின நிகழ்ச்சியை முழுமையாக ஆவணப்படுத்தி இருவெட்டும் வெளியிடப்பட்டது.
- 29/ January / 2019 - இல்ல விளையாட்டு போட்டியை முன்னிட்டு Hilalian OBA இன் முழு அனுசரணையில் மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றது.
- 18/ February / 2019 - முதலாவது பொதுப் பழையமாணவர் (1990-2014 Batch) கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஒருவருட திட்டம் ஒன்றை வரையறை செய்தது OBA நிர்வாகம்.
- 20/ February / 2019 - இல்ல விளையாட்டு போட்டியை முன்னிட்டு Football Games ஒழுங்கு செய்து அதற்கான நிதி உதவிகள் (20,000) அளித்தமை.
- 22/ February /2019 - Hilalian OBA இன் பூரண ஏற்பாட்டில் பாடசாலை நிர்வாகமும் ஒன்றிணைந்து புதிய SDC நிர்வாகம் தாபிக்கப்பட்டது.
- 23/ February /2019 - வலய மட்ட மெய்வல்லுனர் போட்டியில் Football Games இல் சம்பியன் பெற்ற மாணவர்களை கௌர விக்கும் வாகன பேரணி ஒழுங்குசெய்தமை.
- 26/ February /2019 - இல்ல விளையாட்டு போட்டியின் பூரண அனுசரணையை (38,000 ரூபாய்) Hilalian OBA நிர்வாகம் பொறுப்பேற்றமை.
- 26/ February /2019 - அதே நிகழ்வில் அங்கத்தவர் களின் சொந்த நிதியில் Hilalian OBA நிர்வாகத்திற்கு என்று உத்தியோகபூர்வ சீருடை அறிமுகம் செய்யப்பட்டது.
- 1/ March /2019 - 2019 ஆம் ஆண்டுக்கான மூதூர் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் எமது பாடசாலை சம்பியன் பெற்றுக்கொண்டதை விமர்சையாகக் கொண்டாடியமை.
- 30/ March /2019 - பழைய மாணவர்களை ஒன்றி ணைக்க மாணவர் தொகுதி (BATCH) ரீதியாக இணைப்பாளர்களை தேர்வு செய்து அதனூடாக ஒரு பழைய மாணவர் பொதுக்குழு ஒன்றை ஆரம்பித்தமை.
- 2/ April /2019 - இணைப்பாளர் ஒன்றுகூடலில் 60,000 ரூபாய் பெறுமதியான வேலைத்திட்டத்தை BATCH ரீதியாக பகிர்ந்தளித்து அதனை உடன் நிறைவேற்ற ஒழுங்கமைப்பு செய்தமை.
- 5/ April /2019 - 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட கற்கை நெறிக்கான விளம்பர பதாகை அளிக்க பாடசாலைக்கு உதவியமை.
- 5/ April /2019 - Hilalian OBA வேண்டுகோளிற்கு இணங்க துறைமுகங்கள் கப்பல் துறை பிரதி அமைச்சர் கௌரவ அப்துல்லாஹ் மஹ்றூப் அவர்களினால் 2019 ம் ஆண்டுக்குரிய கம்பரலிய வேலைத் திட்டத்தின் கீழ் எமது அல்ஹிலால் பாடசா லையின் திருத்த வேலைக்கு என்று ஒரு மில்லியன் (1,000,000) ரூபாய் வழங்கி பெற்றுத்தர உதவியமை.
- 18/ April /2019 - புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழி நுட்ப கற்கை சிறப்புற நடைபெற எமது பாடசாலையின் தொழிநுட்ப கற்கையைகற்ற மாணவர்களை ஒன்றிக்கும் Hilalian Technology Union என்ற அமைப்பை தோற்றுவித்தமை.
- இல்ல விளையாட்டுப் போட்டிக்காக முன்னால் மாகாண சபை உறுப்பினர் ஜே.எம். லாஹீர் 50,000 ரூபாவையும், வைத்தியர் எம்.நிஹால் அவர்கள் 20,000 ரூபாவையும் அன்பளிப்புச் செய்தனர்.
- 20/ MAY /2019 - நோன்பை தொடர்ந்து இணைப்பாளர் களுக்கான இப்தார் ஏற்பாடு (18,000 ரூபாய்) செய்தமை.



பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள்




இல்ல விளையாட்டுப்போட்டி நிகழ்வு - 2019



மாணவர் அணிவகுப்பு இல்ல விளையாட்டுப்போட்டி நிகழ்வு - 2019



1994 - 2014 வரையான ஹிலாலியன் மாணவர்கள்



வட்டார விளையாட்டுப் போட்டியில் சாதனை - 2019



ஆசிரியர் தின நிகழ்வு - 2019




ஹிலாலியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் இறுதிப்போட்டி - 2019



வைரவிழாவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி



மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியின் சாதனை வீரர்களுக்கான ஊர்வலம்

- 24/ July /2019 - Under 16 Football Team தேசிய ரீதிக்கு தகுதி பெற்றதை ஊக்குவிக்கும் முகமாக துஆ. லாஹீர் அவர்களின் நன்கொடையில் மாணவர்களுக்கான விளையாட்டு சீருடை வழங்கி வைக்க உதவியமை.
- 25-30 / July /2019 - கந்தளாயில் நடைபெற்ற மாகாணமட்டமெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிக்கான மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் சிற்றுண்டி ஏற்பாடுகள் மற்றும் புகைப்பட ஏற்பாடுகள் என்று சுமார் 20,000 ரூபாய் ஒதுக்கீடு செய்தமை.
- 01/ August /2019 - மாகாணமட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் வாகன ஊர்வலம் ஏற்பாடு செய்தமை.
- 03/ August /2019 - அப்துல்லாஹ் மஹ்றூப் அவர்களினால் மெய்வல்லுனர்களுக்கான ஊக்குவிப்பு பரிசாக சுமார் 50,000 ரூபாய் வழங்கிட ஏற்பாடு செய்தமை.
- 20/ August /2019 - தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டிகளுக்கு தெரிவான மாணவர்களுக்கான காலணி, ஊக்குவிப்பு பணம் மற்றும் பதக்கங்கள் வழங்கியமை.
- 24/ September /2019 - HILALIAN T-Shirt ஒன்றை உத்தியோகபூர்வமாக வெளியீடு செய்தமை.
- 5/ October /2019 - OBA ஏற்பாட்டில் HROPA Mutur அனுசரணையில் விசேட பயிற்றுவிப்பாளர் மற்றும் மாணவர்களுக்கான அனுசரணை அளிக்கும் வளங்களை பெற்றுக்கொடுத்தமை.
- 10/ October /2019 - சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 20,000 பெறுமதியான பரிசில்கள் ஏற்பாடு செய்தமை.
- 11/ October /2019 - HPL 2k19 கிரிக்கட் சுற்றுப்போட்டியை முன்னிட்டு ஹிலாலியன் வாகன பேரணி ஒழுங்கமைத்தமை.
- 12/13/14/ October /2019 - இறுதியாக 126,000 செலவில் HPL 2k19 கிரிக்கட் சுற்றுப்போட்டியை ஏற்பாடு செய்தமை.
- எமது பாடசாலை மற்றும் OBA / SDC செய்திகளை வெளியுலகிற்கு தெரியப்படுத்தவும், ஆவணக்காப்பு செய்து வைக்கவும் இணையத்தளம் (www.hilalianoba.com) மற்றும் சமூக வலைத்தள பக்கம் தோற்றுவித்தமை.

**எமது குறுகிய கால பயணத்தில் எம்மால் இயன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்**

**எதிர்வரும் புதிய பழைய மாணவர் சங்க நிர்வாகம் எம்மைவிட சிறப்பாக செயற்பட முன்வரவேண்டும். அத்தோடு எமது பணிகளில் ஒத்துழைப்பு, நிதி உதவிகள், மேலான ஆலோசனைகள் வழங்கிய ஹிலாலியன் பழைய மாணவர் தொகுதிகள், பாடசாலை நிர்வாகம், அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கு எமது பழைய மாணவர் சங்கம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

OBA Hilalian









**N.F. RAHNA**
ARAFA NAGAR
MUTUR.



**T.K.AMANA**
T/M/MMLC
MUTUR.


**I.F. LEESHA**
T/ANNAHAR GMV
MUTUR.


**J.F. BENASIR**
T/ALMINA M.V
MUTUR.

வர்ணம் தீட்டிய ஓவியங்களையும், உங்களது புகைப்படத்தையும் **074 0818782** எனும் WhatsApp இலக்கத்திற்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.








**N.F. SAFNI**
NEITHAL NAGAR
MUTUR.


**M.F. AATHIF**
HAIRIYA NAGAR
MUTUR.


**N. ASMA**
GRADE - 01
T/M/JAYA Vid.


**N.H. HANITH**
GRADE - 03
T/ASRAF Vid.





-Newly refurbished and expanded Pearl Grand with State of the Art Technology
-Consisting of two story function halls with the capacity to accommodate more than 1000 guests
-Separate halls to accommodate Gents and ladies functions
-Celebrate with Grandeur at Pearl Grand and make unforgettable memories with our outstanding service
-A perfect venue for a destination wedding and rooms are available for your convenient stay
-All COVID-19 precautions are in place with MOH approval
-Contact now to reserve your memorable events
-We are always on hand to assist with your perfect occasions



Knox Road
Mutur

0771544488
0752342343

077 237 236 0, 077 200 47 44

Friendly Cafe

**Ifthar & Dinner 10% Off**





IFTHAR & DINNER

**SPECIAL NOTE**

- எங்களிடம் 50 நபர்களுக்குரிய இப்தாருக்கான இடவசதி இலவசமாக செய்து தரப்படும்.
- உங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப உணவு ஏற்பாடு.



முத்திதழ் மாதாந்த சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்குளம் இடம்பெற விரும்பினால் எம்மைத் தொடர்பு கொள்ளவும். **0771020030**




Quality Mart
EMERALD
VANTAGE
LAROUSSE
KIDSWARE
COSMETICS
BABYHUG
MOOSE
EBONY
INNERS
MODERN
MENS WEAR & KIDS WEAR
WEDDING DRESS COLLECTION
QUALITY MART
வாழ்க்கைக்கோர் புது வடிவம்
CALL US NOW!
075 3111322
Batticaloa Road, Periyapalam. Mutur - 05




NEW
X-CITE
Mobile Shop
HUAWEI
NOKIA
vivo
SAMSUNG
oppo
SONY
✓ All kind of Mobile Phones
✓ Mobile Phone Accessories
✓ Watches & Clocks
✓ Radio , BT Speaker & Box
✓ Mobile phone & Camera stands
✓ Rice Cooker & Blander
✓ Hot Bottels
✓ Torch Light
075 4799990
075 5353663
Power House Road, Pradeshiya Sabha Building, Muthur
M.P.Najeen 0757568622




Best Quality
BMS
CONSTRUCTION
& Building Materials Supplier
கட்டுமான நிறுவனங்கள், அரச அரச
சார்பற்ற கட்டுமான வேலைகள் மற்றும்
சாதாரண உள்ளூர் கட்டுமான
வேலைகளுக்குத் தேவையான
பொருட்கள், சீமெந்து கல், கொங்கிரீட்
தூண்கள் மற்றும் பலவற்றை
தரமானதாகவும் மலிவானதாகவும்
பெற்றுக்கொள்ள..
077 166 7660 | 075 53 10 813
Trincomalee Road, Mutur East

SATHATH
ELECTRONICAL
Reparing Center
All kind of Electrical & Electronics
Items are Repaired Here
LCD TV | LED TV | CRT TV | WOOFER
0771698346
Main Street , Mutur 01